கலைவர்

கலைஞர்

மேலைவப் போற்றுவோம்



தலைவர் கலைஞர்

மேலவைப் பேருரை

*

தலைமைக்கழக வெளியீடு

திராவிட முன்னேற்றக் கழகம்

" அறிவகம் "

இராயபுரம் : சென்னை - 600 013.

முதற்பதிப்பு — 1985

விலை ரூ. 1-50

அச்சிட்டோர் : ஜெம் பிரஸ், சென்னை - 1.

இந்நூல் ...

தமிழக அரசின் 1985-86 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் பேரில் சட்டமன்ற மேலவையில் 10—4—1985 அன்று தலைவர் கலைஞர் அவர்கள் ஆற்றிய பேருரையை இந்நூல் வடிவில் தி.மு.க. தலைமை நிலையம் பெருமையோடு வெளியிடுகிறது.

தலைவர் கலைஞர்
மேலவைப் பேருரை

மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே,

1985—86ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களை எடுத்துக் கூறுகின்ற வாய்ப்பினைப் பெற்றமைக்காக நான் முதலில் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்கு முன்பு இந்த அவையிலே பேசிய சில உறுப்பினர்கள் மேலவையின் மரபு மரியாதை காப்பாற்றப்பட வேண்டும்; மேலவைக்கும் பேரவை போன்ற சரி சமமான மரியாதை வழங்கப்பட வேண்டும் என்றெல்லாம் தங்களிடம் முறையீடுகளை வைத்தார்கள். தாங்களும் அதற்கு ஏற்ற வகையில் அவைகள் கவனிக்கப்படும் என்று கூறியதின் மூலம் இந்தமேலவையின் மரபு மரியாதை காப்பாற்றப்பட வேண்டும் என்பதில் எவ்வளவு அக்கறை கொண்டிருக்கிறீர்கள் என்பதை எடுத்துக்காட்டியிருக்கிறீர்கள்.

என்னுடைய இந்த உரையின் தொடக்கத்திலே, இந்த மேலவை எத்தகைய பெருமைமிக்க அவை என்பதையும், யார் யார் எல்லாம் இந்த அவையிலே இடம் பெற்றிருந்தார்கள் என்பதையும் இன்றைக்கு இந்த அவையிலே இடம் பெற்றிருக்கிற நான் எண்ணிப் பார்க்கிற நேரத்தில், மிகச்சிறந்த—சிலாக்கியமான — பெருமைக்குரிய ஓர் இடத்தில் நாமெல்லாம் அமர்ந்திருக்கிறோம் என்ற உணர்வு ஏற்படாமல் போகாது.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமேயானால் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராக இருந்தவரும், ஆங்கிலப் புலமை மிக்கவரும், வாதத்திறமைமிக்க வல்லுநருமான டாக்டர் ஏ. லட்சுமணசாமி முதலியார் அவர்கள் வீற்றிருந்த அவை இந்த அவை.

பம்பாயிலே ஆளுநராகப் பொறுப்பேற்று அரசியல் அரங்கிலே நல்ல வித்தகர் என்ற அளவிற்கு செல்வாக்கு படைத்த டாக்டர் பி. வி. செரியன் அவர்கள் அமர்ந்திருந்த அவை இந்த அவை.

"ஆந்திர கேசரி" என்று சிறப்பிக்கப்பட்ட டி. பிரகாசம் அவர்கள்அமர்ந்திருந்த அவை இது.

மூதறிஞர் ராஜாஜி அவர்கள் அமர்ந்து கருத்துக்களை வழங்கிய அவை இது.

சக்கரை செட்டியார், வி. கே. ஜான், முகம்மது உஸ்மான், ரசாக்கான், முதல்வராக இருந்து பணியாற்றிய ஒ.பி. ராமசாமி ரெட்டியார், நீதிக்கட்சியின் தூண்கள் என்று பாராட்டப்பட்ட பண்பாளர் பி.டி. இராசன், ஏ.ஆர். தாமோதரன், வி.வி. ராம சாமி, மற்றும் கே. பாலசுப்ரமணிய ஐயர், ஏ. எம். அல்லா பிச்சை, பாஷ்யம் அய்யங்கார், டாக்டர் ஏ. சீனுவாசன், மிகப் புகழ்பெற்ற டாக்டர் குருசாமி முதலியார், கிளப்வாலா, தமிழ் அறிஞர் தவத்திரு குன்றக்குடி அடிகள், முத்துரங்க முதலியார், பெரியவர் பக்தவத்சலனுர், இன்று இந்தியக் குடியரசு துணைத் தலைவராகவீற்றிருக்கின்ற ஆர்.வெங்கட்ராமன், மறைந்துவிட்ட நம்முடைய ராஜாராம்நாயுடு, டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன், ஆதித்தனுர், பி.வி. ராஜமன்னுர், பதஞ்சலி சாஸ்திரி, டாக்டர் நடேசன், இன்று பேரவையில் எதிர்க்கட்சித் தலைவராக வீற்றிருக்கின்ற உ. சுப்பிரமணியம் அவர்களுடைய தந்தை உடையப்பா, ராஜாசர் முத்தையா செட்டியார், பேரறிஞர் அண்ணு, என்னுடைய அன்பிற்குரிய நண்பர்-இந்நாள் முதல்வர் எம்.ஜி.ஆர்., பெரும் புலவர் டாக்டர் சிதம்பரநாதன், தேசியக் கவி நாமக்கல் ராமலிங்கம் பிள்ளை ஆகியோர் எல்லாம் அமர்ந்திருந்து அலங்கரித்த அவை இந்த அவை.

இந்த அவையிலே கற்றறிவாளரும், தமிழ் அறிஞருமான தாங்கள் இன்றைக்கு தலைமைஏற்று இந்த அவையை நடத்திக் கொண்டிருக்கிறீர்கள். அதுவும் இந்த அவைக்கு உரிய பெருமை களில் ஒன்று.

இந்த அவையில் இன்று வீற்றிருக்கின்ற நாம் எல்லாம் இப்படிப்பட்ட ஒரு பாரம்பரியம் மிக்க பெரியவர்கள், சான்றோர் கள் இருந்த இடத்தில் அமர்ந்திருக்கிறோம் என்கிற உணர்வோடு தான் நம்முடைய கருத்துக்களை எடுத்துச் சொல்வதில் பெருமை யடைகிறோம்.

நம்முடைய அரசியல் கருத்து மாறுபாடுகளின் காரணமாக வெளியில் மேடைகளில் ஒருவரையொருவர் விமர்சித்துக்கொள் வதும், விமர்சிக்கிற நேரத்தில் காரசாரமானவார்த்தைகளை பரிமாறிக்கொள்வதும் நீண்ட நெடுநாட்களாக இந்திய நாட்டு அரசியல் வரலாற்றில்—குறிப்பாக தமிழக அரசியல் வரலாற் றில் பழகிப்போன ஒன்றுக ஆகிவிட்டது. என்றாலும், அவைகள்

தவிர்க்கமுடியாதவைகளாக ஆகிவிட்டாலும்கூட அவற்றில் ஓர ளவாவது கண்ணியம் இருக்க வேண்டும் என்று எடுத்துச் சொல் வதும் — அதுவும் மீறப்படுகிற நிலைமையில் வெளி மேடை களில் ஒருவரையொருவர் விமர்சித்துக் கொள்கிற நிலைமைகள் இருந்தாலும் கூட, இந்த அவையோடு இணைத்து அப்படிப்பட்ட வார்த்தைகள் சொல்லப்படுகிற நேரத்தில் அது இந்த அவையின் பெருமையைக் குறைப்பதாக இருப்பதாக நான் கருதுகிறேன்.

அதிலும் குறிப்பாக என்னுடைய அன்பிற்குரிய நண்பரும், தமிழகத்தின் நிதியமைச்சர் பொறுப்பை ஏற்றிருப்பவருமான நாவலர் அவர்கள், அண்மையில் பட்டுக்கோட்டை கூட்டத்தில் பேசியதை தஞ்சை— திருச்சி மாலைமுரசு பத்திரிகையில் 27—3—85 அன்று வெளியிட்டிருக்கிறார்கள். நானும் டேப் ரிகார்டரில் அந்தப் பேச்சைக் கேட்டேன்.

நாவலர் அங்கே பேசியிருக்கிறார்—

"ஒரு தொகுதியில் நின்று வெற்றி பெற்று வருகிற யோக்கி யதை இல்லாமல் முப்பது தி.மு. கழக எம். எல். ஏ.க்களின் ஓட் டுக்களை வாங்கி எம். எல். சி. யாகி மக்களைச் சந்திக்கும் யோக்கி யதை இல்லாத கருணாநிதி தேர்தலைப் பற்றிப் பேசுகிறார்.?"

நாவலர் அவர்கள் என்னைப்பற்றி எவ்வளவு கேவலமாக— காரசாரமாக பேசியிருந்தாலும் நான் அதைப் பற்றிக் கவலைப் படமாட்டேன். இந்த அவைக்கு வருபவர்கள் மக்களுடைய வாக்குகளைப் பெற யோக்கியதை இல்லாதவர்கள் தான் வரு கிறார்கள் என்பதைப் போல, இந்த அவையினுடைய தரத்தை அவர்கள் மதிப்பிட்டிருப்பது உள்ளபடியே இந்த அவைக்கு பெருமைசேர்ப்பது ஆகாது என்பதால்தான் — இந்து அவையின் சார்பாக நான் வாதிடுகிறேனே அல்லாமல் எனக்காக வாதாட வில்லை.

எனக்குத் தகுதி இருக்கிறதா? யோக்கியதை இருக்கிறதா— என்பதைப் பற்றியெல்லாம் நாவலர் பேசுவதற்கு உரிமை உண்டு.

ஏனென்றால், இந்த திராவிடர் இயக்கத்தில் எங்களுக்கெல் லாம் வழிகாட்டியாக இருக்கக்கூடிய அளவிற்கு அண்ணாமலை பல் கலைக்கழகத்தில் இளந்தாடி நெடுஞ்செழியனாக இருந்த அந்தக் காலத்திலிருந்து, 40, 45 ஆண்டுக் காலமாக, அவர் எனக்குப் பழக்கமுடையவர். அந்த வகையில் அவருக்குக் கடுமையான வார்த்தைகளைச் சொல்ல உரிமை உண்டு.

ஆனால், இந்த அவையைப் பற்றிக் குறிப்பிடும்போது, இந்த அவையில் யார்யாரோ இருக்கிறோம். தேர்தலில் நிற்காமலேயே இந்த அவைக்கு வந்தவர்களும் இருக்கிறோம்; தேர்தலுக்கு நின்று தோற்று விட்ட பிறகு இந்த அவைக்கு வந்தவர்களும் இருக்கிறோம்.

இந்த அவையில் அப்படி வந்தவர்கள் அமைச்சர்களாகவும் ஆகியிருக்கிறார்கள்.

நாம் அவர்களையெல்லாம் நிச்சயமாககுறைத்து மதிப்பிட மாட்டோம்; நியமனம் மூலமாக இந்த அவையில் இடம் பெற்றவர்களும் இருக்கிறார்கள்.

எனவே, அமைச்சர் பெருமக்கள் மிகப்பொறுப்பான பதவிகளில் இருக்கக்கூடியவர்கள். அந்த அவையில் முன்னவராக இருக்கக்கூடியவர்கள். அவர்களே இந்த அவையைக் குறைத்து, மக்களுடைய ஆதரவைப் பெற முடியாதவர்கள்தான் இந்த அவைக்கு வருகிறார்கள்; அந்தயோக்கியதை இல்லாதவர்கள் தான் இந்த அவைக்கு வருகிறார்கள் என்று கூறுவது வரவேற்கத் தக்கதாக இல்லை.

அது கண்டிக்கத்தக்க ஒரு குறிப்பாக இருக்கிறது என்பதைத் தான் தங்கள் மூலமாக இந்த அவையின் பெருமையைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக நான் எடுத்துக் கூறக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே, இந்தஅவையின் முன்னவர் அவர்களுக்கும் எனக்கும் எத்தனை ஆண்டுக்கால பழக்கம், எவ்வளவு அன்பு, பாசம் என்பதெல்லாம் தனியாக இருந்தாலும், இடையே ஏற்பட்ட அரசியல் காரணமாக, கருத்து மாறுபாடுகள்-காரசாரமான சொற்கள் வீசப்பட்டிருந்தாலும் கூட இந்த அவை நிகழ்ச்சியைக் குறித்து பேசுகிறநேரத்தில் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள்.

அவர்களுடைய பேச்சு 'அண்ணு' பத்திரிகையில் 31—3—85 அன்று வெளியாகியிருக்கிறது.

அறநிலையத்துறை அமைச்சர்— என்னுடைய அன்பிற்குரிய நண்பர் வீரப்பன், அதிலே பேசியிருக்கிறார் :

"மேலவையில் ஆளுநருக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பெரியவர் இராகவானந்தம் பேசுகிறார். புரட்சித் தலைவர் ஆட்சியில் தொழிலாளர்களுக்கு செய்யப்பட்ட நன்மைகளையெல்லாம் விளக்கி அழகாகப் பேசுகிறார்.

அப்போது கருணாநிதி—விதவை போல உட்கார்ந்திருக்கும் கருணாநிதி— "இவ்வளவு நல்ல காரியங்களைத் தொழிலாளர் நல அமைச்சராக இருந்து செய்ததால்தான் உங்களிடமிருந்து தொழிலாளர் நல அமைச்சர் பதவி பறிக்கப்பட்டதா?— என்று கேட்கிறார்."

அன்றைக்கு ஒருநாள் பெருமதிப்பிற்குரிய நண்பர் இராகவானந்தம் அவர்களைப் பார்த்து, 'பதவி பறிக்கப்பட்டதா?' என்று கூட நான் கேட்கவில்லை. "தொழிலாளர் நலத்துறை அமைச்சராக இருந்து இவ்வளவு காரியங்களைச்செய்த உங்களுக்கு இதுதான் பரிசா?" என்றுதான் கேட்டேன்.

அது எந்த வார்த்தையாக இருந்தாலும் பரவாயில்லை. 'இந்த அவையில் உட்கார்ந்திருக்கும் கருணாநிதி' என்று அவர்கள் சொல்லியிருந்தால் கூடப் பரவாயில்லை.

இராகவானந்தம் அவர்களைப் பற்றி நான் சொன்ன கருத்து தவறானது என்று விமர்சிக்க அவருக்கு உரிமை உண்டு.

ஆனால் "அப்போது கருணாநிதி—விதவை போல உட்கார்ந் திருக்கும் கருணாநிதி" என்று அவர்கள் குறிப்பிட்டிருப்பது, இந்த அவையிலே உட்கார்ந்திருப்பவர்கள் எல்லாம் விதவைகள் என் பதைப் போலவும், விதவை என்றாலே அவர்கள் ஏதோ வெறுக் கத்தக்கவர்கள் — சமுதாயத்திலே தீண்டப்படாதவர்கள் — அவர்கள் புறக்கணிக்கப்படக் கூடியவர்கள்— என்கின்ற அள விற்கு இழிவான முறையில் என்னை அவர் குறிப்பிட்டதின் மூலம் இந்த அவையின் பெருமை குலைக்கப்பட்டிருக்கிறது என்பதை எடுத்துக் கூறுவது என்னுடைய கடமை.

என்னைப்பற்றி — என்னுடைய கருத்துக்களைப் பற்றி — நான் சார்ந்திருக்கிற இயக்கத்தைப் பற்றி— எவ்வளவு கடுமையான விமர்சனம் செய்தாலும் பரவாயில்லை. அனைவரும் கலந்து பழகி கருத்துக்களைப் பரிமாறிக்கொள்கிற இந்த அவையைக் குறித்து- நான் குறிப்பிட்ட அந்த பெரியவர்களெல்லாம் இருந்த இந்த அவையைக் குறித்து— கற்றறிந்த தமிழறிஞர் சிலம்புச் செல்வர் தலைமையேற்று நடத்துகின்ற இந்த அவையைக் குறித்து— இப் படிப்பட்ட விமர்சனங்கள் வரக்கூடாது என்பதற்காகத்தான் இதைச் சொன்னேனேயல்லாமல் வேறு அல்ல.

ஆர். எம். வீரப்பன்: நான் பேசியதாக ஒரு குறிப்பை 'அண்ணா' பத்திரிகையிலே வந்தது என்று குறிப்பிட்டு மாண்பு

மிகு டாக்டர் கலைஞர் அவர்கள் இங்கே ஒரு கருத்தைத் தெரிவித் திருக்கிறார்கள், 'அண்ணு' பத்திரிக்கையிலே எப்படி வந்திருக் கிறது என்று நான் பார்க்கவில்லை. ஆனால் நான் அன்றைக்குப் பேசுகிற் போது இப்படிப் பேசவில்லை என்பதை நான் திட்டவட் டமாக கூறுகிறேன். வேளாண்மைத் துறை அமைச்சர் டாக்டர் காளிமுத்து அவர்களும் அந்தக்கூட்டத்தில் இருந்தார்கள். அப் போது டாக்டர் கலைஞர் கருணநிதி என்றுதான் குறிப்பிட்டு நான் பேசியிருப்பேன். வெறும் கருணநிதி என்று நான் குறிப்பிடுவ தில்லை. ஆனால் பத்திரிகைகளில் எப்பொழுதுமே நாம் அடை மொழியோடு பெரியவர்கள் பற்றி குறிப்பிடுகின்ற வார்த்தை களை அவர்களுடைய விருப்பத்தின்படி விட்டு விட்டு வெளியிடு கிறார்கள். அது எல்லாப்பத்திரிகைகளிலும் இன்று பத்திரிகா தர்மமாகவே ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. முரசொலி உட் பட. எனவே அவர்கள் கருணநிதி என்று போட்டிருந்தாலும் நான் அப்படிப்பேசவில்லை. அது, அன்று, கூட இருந்தவர்களுக்குத் தெரியும். கருணநிதி அவர்கள் விதவைக்கோலத்தோடு உட் கார்ந்தார் என்று வந்திருக்குமேயானால் அது தவறு! நான் அப் படிப் பேசவில்லை. அது வேறு காரணமாக—வேறு இடத்தில் வரக்கூடிய உவமானத்திற்காகப் பயன்படுத்தப் பட்டது. எனவே இந்த அவை குறித்தோ, அமர்ந்திருக்கிற உறுப்பினர்கள் குறித்தோ தலைவர்கள் குறித்தோ பேசப்படவில்லை; பேசுகிற எண்ணமும் இல்லை.

தலைவர் கலைஞர்: என் கையில் இருப்பது அண்ணு பத்தி ரிகை. அதில் வந்ததைத்தான் படித்தேன். அதில் வந்திருப்பது தவறு என்று அமைச்சர் சொன்ன பிறகு நான் அதைப் பற்றிப் பேசவில்லை. அவர்களுடைய கட்சியின் அதிகாரப்பூர்வமான ஏட்டில் அவர்கள் பேசாத ஒன்று வந்திருப்பதாக அவர்களே குறிப்பிட்டார்கள். நான் அதை மனமுவந்து ஏற்றுக் கொள் கிறேன்.

அமைச்சர் வீரப்பன்: கட்சியின் அதிகாரப்பூர்வமான ஏடு அண்ணுவிலும் வருகிறது. இன்னொரு கட்சியின் அதிகார பூர்வமான ஏடு முரசொலியிலும் வருகிறது. அரசியல் உணர்வு களை எப்படி வெளிப்படுத்துவது என்று கையாண்டு வருகிற முறையிலிருந்து இந்த உணர்வுகள் வெளிப்படுகின்றன. இரண் டிற்கும் இந்த நடைமுறை பொருந்துகிறது. அரசியல் அடிப் படையில் என்ன நிலைமை என்பதைப் பொறுத்துத்தான் நான் அந்த வார்த்தையை (விதவை) சொல்ல நேரிட்டது.

தலைவர் கலைஞர் : மறுபடியும் அதை வலியுறுத்துகிறேன். பரவாயில்லை. அவர் தாலி கட்டிக் கொண்டவராக இருக்கட்டும். நான் விதவையாக இருந்து விட்டுப் போகிறேன். ஆனால் நான் விதவையாக இருந்தாலும் இருப்பேன். பலபேருக்கு நிச்சயமாக தாலி கட்டிக் கொள்ள மாட்டேன் என்பதை மாத்திரம் நான் உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அனகாபுத்தூர் கூட்டத்தில் நிதியமைச்சர் நாவலர் அவர்கள் பேசி 7—4—85 தேதியிட்ட 'அண்ணா' பத்திரிகையில் வந்துள்ள கருத்து இது.

''1967ல் பாடுபட்டு பெற்ற ஆட்சியை அண்ணாவுக்குப் பிறகு கருணாநிதி சின்னாபின்னமாக்கினார். இவர் முதல்வரானதும் அண்ணா கண்ட ஆட்சி வீழ்த்தப்பட்டது''

இது நிதியமைச்சர் நாவலர் அவர்களுடைய சொற் பொழிவில் ஒரு பகுதி, இதற்கு நான் பதில் சொல்வதைவிட நாவலர் அவர்களைக் கொண்டே பதில் சொல்வது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

நெருக்கடி காலக் கொடுமையை எதிர்த்த காரணத்தால் தி.மு. கழக ஆட்சி 1976ஆம் ஆண்டு ஜனவரி இறுதி நாள் கலைக்கப்பட்ட பிறகு நாவலர் அவர்கள் முரசொலி பத்திரிசையில் தொடர்ந்து பல கட்டுரைகளை அவருக்கே உரிய தனித் தமிழ் நடையில் எழுதியிருக்கிறார்கள். அதில் 24-4-76 முரசொலியில் நாவலர் அவர்கள் எழுதிய கட்டுரையில் ஒரு பகுதி:-

''தி.மு. கழக ஆட்சி, வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு முன்பு கொடுத்து வந்த சுமார் 2.75 கோடி நீண்ட காலக் கடனை சுமார் 35 கோடி அளவுக்கு உயர்த்திற்று. 31 கோடியாக இருந்த குறுகியக் காலக் கடனை சுமார் 75 கோடியாக ஆக்கிற்று. தி.மு. கழக ஆட்சி உழவுத் தொழில் வளர்ச்சிக்கும், கைத்தொழில் பெருக்கத்திற்கும், பொறியியல் தொழில் மேம்பாட்டிற்கும், கூட்டுறவுத் துறையை ஒல்லும் வகையெல்லாம் பயன்படுத்தி வந்ததை நல்லறிவு படைத்த நடுநிலையாளர்கள் யாரும்மறந்திருக்க மாட்டார்கள். கழக அரசு பாடுபட்டு வந்ததன் காரணமாகத்தான் 1966ல் 54 லட்சம் டன்னாக இருந்த உணவு உற்பத்தியை 1976ல் 80 லட்சம் டன்னாக பெருக்கிக்காட்ட முடிந்தது.''

இது நாவலர் அவர்கள் 76ஆம் ஆண்டு முரசொலியில் எழுதியது. இன்றைக்கு அவர் தந்த நிதிநிலை அறிக்கையைப் படித்துப்

யார்த்தால் இந்த ஆண்டு எதிர்ப்பார்க்கப்படுகின்ற உணவு உற் பத்தி என்பது எண்பத்து நான்குலட்சம் டன் என்றுதான் குறிப் பிடப்பட்டிருக்கிறது.

நிதியமைச்சர் நாவலர் : மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் இங்கே நான் பேசிய பேச்சைக் குறிப்பிட்டார்கள். நான் பேசியது 1967ல் அண்ணு அவர்கள் ஆட்சி அமைத்தார்கள். 76ல் ஜனவரி 31ஆம்தேதி டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையில் இருந்த ஆட்சி வீழ்த்தப்பட்டது. வீழ்த்தப்பட்ட ஆட்சியை மறு படியும் புரட்சித் தலைவர் தூக்கி நிறுத்தினர் என்று சொன் னேனேதவிர, கலைஞர் தலைமையில் இருந்த ஆட்சி சின்னுபின்னப் படுத்தப்பட்டது என்று சொல்லவில்லை. அப்படி சொல்லியிருந் தால் அதற்கு நானும் பங்கேற்க வேண்டியவன்தான். ஏனென் றால் 76 வரை நானும் இருந்திருக்கிறேன். தூக்கி நிறுத்தினர் என்றுதான் சொன்னேனே தவிர வேறல்ல, அவரிடம் நான் எந்த அளவிற்கு மதிப்பு வைத்திருக்கிறேன்; அவர் என்னிடம் எந்த அளவிற்கு மதிப்பு வைத்திருக்கிறார், என்பதை அனைவரும் அறி வோம். அரசியல் விமர்சனம் செய்கிற நேரத்தில் சில கருத்துக் களைச் சொல்கிறோம். பட்டுக்கோட்டையில் பேசுகிற நேரத்தில் கூட இந்த அனைவையைக் கேவலம் செய்ய வேண்டுமென்ற தன் மையில் நான் சொல்லவில்லை. பொதுமக்களிடத்தில் நின்று மக்களின் வாக்குகளைப் பெற்று சட்டமன்ற பேரவைக்கு வந்து முதல்வர் இடத்தில் உட்கார்ந்திருந்த கலைஞர் எம்.எல்.ஏ.க்களின் வாக்குகளைப் பெற்று மேலவையில் உட்கார வேண்டிய அவசியம் இல்லை. இங்கேயே நின்றிருக்கலாம் என்றுதான் சொன்னேனே தவிர இந்த அவையைக் கேவலம் செய்ய வேண்டுமென்ற எண்ணம் கிடையாது. இதே அவையில் அண்ணு அவர்களே சட்டமன்ற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு இருந்திருக் கிறார்கள் என்பதையும் நான் அறிவேன். அந்த அண்ணு அவர் களைத்தான் நீங்களும் தலைவராக ஏற்றுக் கொண்டிருக்கிறீர்கள். நானும் ஏற்றுக் கொண்டிருக்கிறேன். பொதுமக்களிடம் நின்று வாக்குகளை பெற்று வந்திருக்கலாம் என்றுதான் சொன்னேன்.

மேலவைத் தலைவர் : திராவிட முன்னேற்றக்கழகத் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், நிதி அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய வேண்டுகோள். பத்திரிகைகளை வைத்துக்கொண்டு பேசுவது என்றுல் யாரும் முடிவிற்கு வர முடியாது. அவர்களே இல்லை என்று மறுத்து விடுகிறார்கள். ஒருவருக்கொருவர் விளங்கிக் கொண்டு புரிந்து கொள்ளவும், தெளிவு ஏற்படவும்

பயன்படுவதால் வரவேற்கிறேன். கூடுமான வரை பத்திரிகைகளை வைத்துக் கொண்டு குற்றஞ் சாட்டிக்கொண்டால் இந்த நிலைமைதான் ஏற்படும்.

தலைவர் கலைஞர்: வெளியிலே பேசுவது பத்திரிகைகளிலே வெளி வந்து அவைகளை வைத்து இங்கே பேசுவது சில நாட்களாக அனுமதிக்கப்பட்டுவிட்ட காரணத்தால், அதுவும் இந்த அவையைப் பற்றிய குறிப்பு என்பதால், அது பத்திரிகையில் வந்திருக்கின்ற காரணத்தால்தான் நான் அவைகளை இங்கே கோடிட்டுக்காட்ட நேர்ந்ததேயல்லாமல் வேறல்ல. அண்ணா அவர்கள் பாடுபட்டு உருவாக்கிய ஆட்சியை கருணாநிதி சின்னாபின்னமாக்கினார் என்று தான் பேசவில்லை என்றும், அண்ணா பத்திரிகையில் அப்படி வந்தது தவறு என்றும் சொல்லிவிட்டார்கள். தவறுகளைத் திருத்திக்கொள்ள வேண்டியது "அண்ணா" பத்திரிகைக்கு உரியது என்பதை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து அப்போது நாவலர் அவர்கள் முரசொலியில் மேலும் எழுதியிருக்கிறார்கள். "1966ல் 11,000 சிறுதொழில்கள் இருந்த நிலையைப் பெருக்கி 76ல் சுமார் ஐம்பதாயிரம் சிறுதொழில்கள் தமிழகத்தில் எல்லா துறைகளின் சார்பாகவும் இயங்குகின்றன" என்று 24-4-76 அன்றைய "முரசொலி" கட்டுரையில் நாவலர் அவர்கள் எழுதியிருக்கிறார்கள்.

பம்பு செட்டுகளைப் பற்றி நாவலர் அவர்கள் எழுதும் போது—"மின் இறைவைகளைப் பயன்படுத்தி நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்கிக் கொண்டிருக்கும் மாநிலங்களில் தமிழ்நாடு முதல் இடத்தில் இருக்கிறது. 1967 வரையில் இரண்டே முக்கால் லட்சம் பம்ப் செட்டுகள் இருந்தன. இடைக்காலத்தில் கழக ஆட்சியில் நான்கே முக்கால் லட்சம் பம்ப்செட்டுகள்— மின் இறைவைகள் பெருக்கப்பட்டன. ஆக ஏழேமுக்கால் லட்சம் மின் இறைவைகள் இப்பொழுது பயன்பட்டு வருகின்றன. இந்த வகையில் தமிழ்நாடு தான் முன்னோடியாக இருந்து வருகிறது. இந்தியா முழுவதிலும் உள்ள மின் இறைவைகளில் மூன்றில் ஒரு பகுதி இறைவைகள் தமிழ்நாட்டில் மட்டுமே இருக்கின்றன" என்று 27–3-76 முரசொலி இதழில் எழுதியிருக்கிறார்:

அதே கட்டுரையில் "சாலைகளின் நீளத்தைப் பொறுத்து மாநிலங்களோடு ஒப்புநோக்கும்போது தமிழ்நாடு ஐந்தாவது இடத்தில் இருக்கிறது. தமிழ்நாடு அளவு பரப்புள்ள மாநிலங்

களோடுஒப்பிட்டுப்பார்த்தால் தமிழ்நாடுதான் முதல்இடத்தைப் பெறுகிறது''என்றும் ''காழ்ப்புணர்ச்சியின் காரணமாகச் சிலரும், சில ஏடுகளும் கழக ஆட்சியில் தமிழ் நாட்டின் பொருளாதாரம் சீர்கெட்டு விட்டது. பணம் எல்லாம் காலியாகிவிட்டன, நிதி ஆதாரங்கள் எல்லாம் பாழ்படுத்தப்பட்டு விட்டன. திட்டங்கள் எல்லாம் நிறைவேறவில்லை என்று பொய்யுரைகள் புகன்றுலும் காய்தல் உவத்தல் இன்றி நடுநிலைநின்று ஆராய்ந்து பார்க்கும் நல்லறிவாளர்கள் தமிழகத்தில் சென்ற சில பல ஆண்டுகளாக நிலவி வரும் பொருளாதார சீர்நிலையைப் பாராட்டவே செய்வர்'' என்றும் 76ஆம் ஆண்டு நாவலர் கட்டுரை தீட்டினர்.

''1975ஆம் ஆண்டிற்காக நடைபெற்ற திறமைப் போட்டியில் அகில இந்தியாவிலேயே தொழிற் பயிற்சித்திறனில், தமிழ் நாடுதான் மிகச் சிறந்த மாநிலமாகத் திகழ்கிறது என்று தேர்ந்தெடுக்கப்பட்டு தமிழ்நாட்டிற்கு குடியரசுத் தலைவரின் சுழற் கேடயம் வழங்கப்பட்டிருக்கிறது''— இது 9-5-76 முரசொலி இதழில் நாவலர் அவர்கள் தீட்டிய கட்டுரையின் ஒரு பகுதி.

''தி.மு. கழக ஆட்சியின் போது தமிழ்நாடு பரவலாகவும், பொதுவாகவும், பொருளாதார வளர்ச்சி பெற்று இந்தியாவிலேயே முன்னணியில் நிற்கக்கூடிய தன்மையைப் பெற்றிருந்தது என்பது, வேறு மாநிலத்தைச் சேர்ந்த வல்லுனர் நடுநிலை நின்று ஆராய்ந்து வெளியிட்ட முடிவிலிருந்து அறிந்து கொள்ளலாம்''— 11-5-76 முரசொலி இதழில் நாவலர் அவர்கள் தீட்டிய கட்டுரை இது.

இதையெல்லாம் எழுதிய நாவலர் அவர்கள் இன்றைய தினம் நிதி அமைச்சர் பொறுப்பை ஏற்று இந்த அவை முன்னுல் நிதிநிலை அறிக்கையை வைத்திருக்கிறார்கள்.

இந்த நிதி நிலை அறிக்கையைப் பொறுத்தவரையில் 1985-86ஆம் ஆண்டு வருவாய்க்கணக்கில் தமிழக அரசின் வருவாய் 2,368.42 கோடி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நிதி நிலை வளர்ந்துள்ள வரலாற்றை நாம் சற்று திரும்பிப் பார்த்து கவனித்தால் எப்படிப்பட்ட பெரும் வளர்ச்சி தமிழக அரசின் வருவாய் இனத்தில் ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் எளிதாக உணர்ந்து கொள்ள முடியும்.

1938-39ஆம் ஆண்டில் வருவாய்க்கணக்கில் இந்த அரசாங்கத்தின் வருவாய் 16.14 கோடி ரூபாய். இதுதான் இப்போது 2,368.42 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது.

1966-67ல் காங்கிரஸ் ஆட்சி நடந்தபோது — அந்த ஆட்சி நிறைவுறுகிற அந்தக் காலகட்டத்தில் 188.72 கோடி ரூபாய் வருவாய்க்கணக்கில் வருவாய் இருந்தது.

1975-76ஆம் ஆண்டு கழக ஆட்சி கலைக்கப்பட்ட அந்த கால கட்டத்தில் தமிழக அரசின் வருவாய் 501 கோடி ரூபாய். ஆக இப்போது அந்த வருவாய் நான்கரை மடங்கு அதிக அளவிற்கு உயர்ந்து 501 கோடி ரூபாயிலிருந்து இந்தபத்தாண்டு காலத்தில் 2,368.42 கோடி ரூபாய் என்ற அளவிற்கு உயர்ந்திருக்கிறது.

ஆனால் இந்த வருமானம் உயர்ந்த அளவிற்கு பல்வேறு துறைகளுக்கு ஒதுக்கப்பட்ட தொகைகள் உயர்த்தப்பட்டிருக் கிறதா என்று பார்த்தால் அது ஏமாற்றம் அளிக்கத் தக்க வகையில்தான் இருக்கிறது.

நிதி அமைச்சர் மாண்புமிகு நாவலர் அவர்கள் பேரவையில் இந்த விவாதத்திற்கு பதிலளித்தபோது "தமிழகம் வளர்ச்சியில் கீழ்நிலைக்குப் போய்விட்டதாக சிலர் சொன்னார்கள். முதல மைச்சர் எம்.ஜி.ஆர். ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு ஏழெட்டு ஆண்டு காலங்களில் எதிலும் பின்தங்கிய நிலையில் தமிழகம் இல்லை. 1976-77ல் கல்விக்காக ஒதுக்கப்பட்ட தொகை 141 கோடி; அது இன்று 468கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது" என்று அவர்கள் குறிப்பிட்டதோடு ஒவ்வொரு துறையாக எந்த அளவிற்கு உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதையும் சுட்டிக்காட்டி னார்கள்.

ஆனால் 501 கோடி ரூபாய் வருமானம் இருந்த கழகஆட்சியில் 1975-76ல் இந்தத்துறைகளுக்கு ஒதுக்கப்பட்ட விகிதாசாரத்தை விட, நான்கரை மடங்கு அதிகமாக வருவாய் உள்ள இந்தக் காலகட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள தொகை மிகவும் குறை வானது என்பதைச் சுட்டிக்காட்டுவது என்னுடைய கடமை.

1975-76ஆம் ஆண்டு 501 கோடி ரூபாய் வருமானம் இருந்த போது கல்விக்காக ஒதுக்கப்பட்ட தொகை 118 கோடி. அதா வது மொத்த வருவாயில் 23.64 சதவிகிதம். இதே 23,64 சத விகிதம் அளவிற்கு இப்போது இந்த ஆண்டு வருவாயில் ஒதுக்கப் பட வேண்டுமென்றால் 559.80 கோடி ரூபாய் கல்விக்காக ஒதுக் கப்பட்டிருக்கவேண்டும். அதற்கு மாறாக கல்விக்காக இந்த ஆண்டு ஒதுக்கியிருப்பது 468 கோடிரூபாய்தான். அதாவது 19.76 சதவிகிதம்தான் கல்விக்காக இந்த ஆண்டு ஒதுக்கப்

பட்டிருக்கிறது. கடந்த ஆண்டோடு ஒப்பிட்டால்கூட —கடந்த ஆண்டு 20.01 சதவிகிதம் ஒதுக்கப்பட்டிருக்க, அதைவிட குறைவான அளவிற்குத்தான் இந்த ஆண்டு ஒதுக்கப்பட்டிருக் கிறது.

கல்விக்காக மாத்திரமல்ல; இன்னும் சில முக்கியமான துறைகளில் தி.மு. கழக ஆட்சியின்போது ஒதுக்கப்பட்ட தொகையைவிட விகிதாச்சாரத்தில் இந்த ஆட்சியில் குறைவா கத்தான் இந்த வரவுசெலவு திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

1975-76ஆம் ஆண்டு மருத்துவத்திற்காக 6.19 சதவிகிதம் ஒதுக்கப்பட்டது. ஆனால் இந்த ஆண்டு 4.58 சதவிகிதம்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. கூட்டுறவுத்துறையில் 75-76ஆம் ஆண்டு 0.92 சதவிகிதம் ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த ஆண்டு 0.50 சத விகிதம்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதாவது 75-76ஆம் ஆண்டு ஒதுக்கியது போல் கூட்டுறவுத்துறைக்கு 0.92 சதவிகிதம் ஒதுக்கியிருந்தால் 21.79 கோடி ஒதுக்கியிருக்கவேண்டும். ஆனால் ஒதுக்கியிருப்பது 11.78 கோடி ரூபாய்தான்.

அடுத்து, ஊரகத் தொழிலையும் சேர்த்துத் தொழில்கள் என்ற தலைப்பில் 1975-76ஆம் ஆண்டு 0.79 சதவிகிதம் ஒதுக்கி யிருக்க, இப்போது 85-86ல் 0.71 சதவிகிதம்தான் ஒதுக்கப்பட்டி ருக்கிறது. தொழிலாளர் நலன் என்ற தலைப்பில் 75-76ல் 0.67 சதவிகிதம் ஒதுக்கப்பட்டிருக்க, இப்போது 0.52 சதவிகிதம்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

பாசனத்திற்காக 75—76ல் 3.94 சதவிகிதம் ஒதுக்கப் பட்டிருக்க, இப்போது 2.4 சதவிகிதம்தான் ஒதுக்கப்பட்டிருக் கிறது. சாலைகள், பாலங்களுக்காக 75-76ல் 4.20 சதவிகிதம் ஒதுக்கப்பட்டிருக்க, இப்போது 3.08 சதவிகிதம்தான் ஒதுக்கப் பட்டிருக்கிறது.

காட்டு வளத்திற்கு 75-76ல் 0.66 சதவிகிதம் ஒதுக்கப்பட்டி ருக்க, இப்போது 0.52 சதவிகிதம்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. சிறைச்சாலை வசதிகளுக்காக 75-76ல் 0.88 சதவிகிதம் ஒதுக்கப் பட்டது. இப்போது 0.34 சதவிகிதம்தான் ஒதுக்கப்பட்டிருக் கிறது.

காவல்துறைக்கு 75-76ல் 5-30 சதவிகிதம் ஒதுக்கப்பட்டி ருக்க, இப்போது 3.89 சதவிகிதம்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு 75-76ல் 1.16 சதவிகிதம்

ஒதுக்கப்பட்டிருக்க, இப்போது 0.49 சதவிகிதம்தான் ஒதுக்கப் பட்டிருக்கிறது.

தாழ்த்தப்பட்டோர் நலனுக்காக 75-76ல் 1-90 சதவிகிதம் ஒதுக்கப்பட்டிருக்க, இப்போது இந்த வரவு செலவு திட்டத்தில் 1.86 சதவிகிதம்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

எனவே இதிலிருந்து முக்கியமான எல்லா துறைகளுக்கும் கழக ஆட்சிக்காலத்தில் ஒதுக்கப்பட்ட சதவிகிதத்தை விட இப்போது குறைவாகத்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதற் காகத்தான், இவைகளை எல்லாம் நான் எடுத்துச் சொன்னேனே அல்லாமல் வேறல்ல.

இப்படி ஒதுக்கப்பட்ட இந்தத் தொகைகளை முழுமையாக ஒதுக்கப்பட்ட அந்த திட்டங்களுக்காக செலவழிக்கப்பட்டிருக் கிறதா என்றால், கணக்குத் தணிக்கை அதிகாரிகள் தந்துள்ள அறிக்கையின்படி, காம்ப்ட்ரோலர் அண்டு ஆடிட்டர் ஜெனரல் ஆப் இண்டியா கொடுத்துள்ள அறிக்கையின்படி பார்த்தால், அதிலே உள்ள விவரங்கள் இல்லை என்றுதான் கூறுகின்றன. மத் திய அரசிடம் தொகையை அதிகப்படுத்திக் கேட்டு வாங்கினால் மாத்திரம் போதாது. இங்கே நம்முடைய நிதியாதாரத்தை அதிகமாக்கினால் மாத்திரம் போதாது. திட்டங்கள் தீட்டப்படு வதாக அறிவித்தால் மாத்திரம் போதாது; அந்தத் தொகை கள் உரியமுறையில் செலவழிக்கப்பட வேண்டும் என்பதற்காகத் தான்— . திருத்திக்கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் இவைகளைச் சொல்லுகிறேனே அல்லாமல் வேறல்ல

1982-83ம் ஆண்டு கணக்கை தணிக்கை செய்த அதிகாரிகள் தந்த விவரங்களின் அடிப்படையில் பார்த்தால், வருவாய்த் துறையில் 561.10 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டதில், 379.72 கோடி ரூபாயும், மூலதனத்துறையில் 174.78 கோடி ரூபாய் ஒதுக் கப்பட்டதில் 147.41 கோடி ரூபாயும்தான் செலவு செய்யப்பட் டிருக்கிறது. அதாவது வருவாய்த்துறையில் 163.38 கோடியும், மூலதனத்தில் 27. 37 கோடி ரூபாயும் செலவழிக்கப்படவில்லை. இதை சதவிகித அடிப்படையில் பார்த்தால் மொத்தத்தில் 29 சதவிகிதம் ஒதுக்கீடு செய்யப்பட்டது செலவழிக்கப்படவில்லை. வருவாய்த்துறையில் முக்கியமாக எந்தெந்த துறைகளில் குறைவு ஏற்பட்டிருக்கிறது என்று பார்த்தால், சமூக பாதுகாப்பு, சமூக நலம் என்பதில் 31.98 கோடி ரூபாயும், கல்வித்துறையில் 22.83 கோடி ரூபாயும், மருத்துவம் என்ற தலைப்பில் 8.22 கோடி ரூபாயும், பொதுமருத்துவம்-குடிநீர் வழங்கிடல் என்பதில் 7.47. கோடியும், தொழிலாளர் நலம், வேலைவாய்ப்பு என்பதில்

4.92 கோடியும், உணவுத் துறையில் 51.47 கோடியும், சாலைகள், பாலங்கள் என்பதில் 12.85 கோடியும், வேளாண்மை எனும் தலைப்பில் 11.95 கோடி ரூபாயும் செலவழிக்கப்பட வில்லை.

மேலும் பல துறைகளில் ஒதுக்கப்பட்ட தொகை செலவழிக் கப்படாமல் மீதப்பட்டிருக்கிறது. நில வருவாய்த்துறையில் 12.09 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டதில், 3.02 கோடிரூபாய் செல வழிக்கப்படவில்லை. வேளாண்மைத் துறையில் 83.73 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்க, 16.27 கோடி ரூபாய் செலவழிக்கப் படவில்லை. இன்னொரு அதிர்ச்சி தரத்தக்க செய்தி, நகர்ப் பகுதி வளர்ச்சி என்பதற்காக 24.66 கோடிரூபாய் ஒதுக்கப்பட்டிருக்க, 22.23 கோடி ரூபாய் அதிலே செலவழிக்கப்படவில்லை. பாசனத் திற்காக 43.51 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்க, 4.56 கோடி ரூபாய் செலவழிக்கப்படவில்லை. இவைகள் மாத்திரமல்ல, இன் னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன்.

மாநில ஆயத்துறை என்ற தலைப்பின் கீழ் — மதுவிலக்கு தளர்த்தப்பட்டது, அல்லது ரத்து செய்யப்பட்டது அல்லவா— அந்தச் சூழலில் குடிப்பழக்கம் தீதானது என்பதை நாட்டு மக்க ளுக்கு எடுத்துவிளக்க 137.11லட்சம் ரூபாய் 82-83ம் ஆண்டு ஒதுக்கப்பட்டதில் கிட்டத்தட்ட 93லட்சம் செலவழிக்கப்படா மல் சரண்டர் செய்யப்பட்டதாக, தணிக்கை அதிகாரிகளின் அறிக்கை கூறுகிறது. அதற்கான காரணம் என்ன சொல்லப்படு கிறதென்றால் விளம்பரம் செய்வதற்காக நூறு லட்சம் ரூபாய் அந்தத் தலைப்பில் ஒதுக்கப்பட்டது. ஆயத் தீர்வை கமிஷனர் 1982-ஆம் ஆண்டு மே மாதம் எப்படியெப்படி அந்தப் பணியி னைச் செய்யலாம் என்பதற்கான திட்டத்தைத் தயாரித்து அனுப் பினர். அரசாங்கம் அதனை ஏதோ காரணம் கூறி திருப்பி அனுப்பிவிட்டது. மாற்று திட்டம் இதுவரையில் வேறு எதுவும் கமிஷனரால் தயாரித்து அனுப்பப் படவில்லை. அதனால் 93 லட்சம் ரூபாய் சரண்டர் செய்யப்பட்டது என்று கூறப்பட்டிருக் கிறது.

தணிக்கை அதிகாரியின் அறிக்கை—அரசாங்கத்தின் 82-83-ம் ஆண்டிற்கான கணக்குகளைத் தணிக்கை செய்து கடைசியாக அவையிலே வைக்கப்பட்ட அறிக்கை—அதற்குப் பிறகு உள்ள ஆண்டுகளுக்கான அறிக்கைகள் இன்னும் வைக்கப்படவில்லை. அவையிலே வைக்கப்பட்ட 82-83-ம் ஆண்டிற்கான அறிக்கை யிலே உள்ள விவரங்களைத்தான் நான் கூறியிருக்கிறேன்.

நிதியமைச்சர் நாவலர் அவர்கள் தன்னுடைய உரையில் "இருபது அம்சத் திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்ற தமிழ்நாடு மிகவும் முக்கியத்துவம் கொடுத்து வந்துள்ளது. இருபதுஅம்சத் திட்டங்களை நிறைவேற்றும் பணியில் தமிழ்நாடு தலைசிறந்த சாதனையை எடுத்துள்ளதென்று 1982-83-ம் ஆண்டி லேயே அறிவிக்கப்பட்டது" என்று இப்போது நிதிநிலை அறிக் கையில் கூறியிருக்கிறார்கள்.

இருபது அம்சத் திட்டத்தை தி. மு. கழகஅரசு நிறைவேற்ற வில்லை என்கிற குற்றச்சாட்டு பேரவையிலும், மேலவையிலும் அப்போது எழுப்பப்பட்டு நிதியமைச்சர் அவர்களும் நானும் அதற்கான விளக்கங்களை அப்போது வழங்கியிருக்கிறோம். தி. மு. கழக அரசு இருந்தபோது இருபது அம்சத் திட்டத்தைச் சரியாக நிறைவேற்றவில்லை என்று குறை கூறி பேசியதோடல் லாமல் அதற்கான ஒரு கண்டனத் தீர்மானத்தையே கொண்டு வந்தபோது நான் அளித்த பதிலை விட — கல்கத்தாவிலிருந்து 76-ம் ஆண்டு ஏப்ரல் 19-ம் நாள் வெளியிடப்பட்ட 'பிசினஸ் ஸ்டாண்டர்டு' என்கிற ஒரு ஆங்கிலப் பத்திரிகையில் வந்த புள்ளி விவரங்களைக் குறிப்பிட்டால் சிறப்பாக இருக்கும்.

அந்தப் பத்திரிகை—இருபது அம்சத் திட்டம் பிறப்பிக்கப் பட்ட பிறகு ஆறு மாதங்களில் ஒவ்வொரு மாநிலமும் எந்த அளவிற்கு வேலை வாய்ப்பு அளித்துள்ளது என்பதைப் படம் பிடித்துக் காட்டி வெளியிட்டது. அதன் விவரம் வருமாறு :

அஸ்ஸாம்	—	3,112
இமாசலப்பிரதேசம்	—	4,802
குஜராத்	—	5,877
கர்நாடகம்	—	6,759
மேற்கு வங்காளம்	—	6,813
பீகார்	—	11,780
ராஜஸ்தான்	—	12,909
கேரளா	—	13,475
ஒரிசா	—	14,049
அரியானு	—	14,207
பஞ்சாப்	—	14,445
மத்தியப்பிரதேசம்	—	17,372
மகாராஷ்டிரா	—	17,498
ஆந்திரப்பிரதேசம்	—	19,436
உத்தரப்பிரதேசம்	—	21,549
தமிழ்நாடு	—	21,680

எட்டு கோடி மக்களுக்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட உத்தரப் பிரதேசம் 21,549 பேர்களுக்கும், நான்கு கோடி மக்களுக்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்டிருந்த தமிழகம் இருபது அம்சத் திட்டப்படி ஆறு மாதங்களில் 21,680 பேர்களுக்கும் வேலை வாய்ப்பு அளித்தது.

அது மாத்திரமல்ல. அதே ஏட்டில் ஒவ்வொரு மாநிலமும் எத்தனை சதவிகிதம் மின் வசதி செய்து கிராமங்களுக்குக் கொடுத்திருக்கிறது என்பதைச் சொல்லுல்போது—

அருணாசலப்பிரதேசம்	—	1.9	சதவிகிதம்
சிக்கிம்	—	2.8	,,
திரிபுரா	—	3.4	,,
மேகாலயா	—	4.3	,,
அஸ்ஸாம்	—	6.3	,,
மணிப்பூர்	—	11.3	,,
பீகார்	—	15.5	,,
மத்தியப்பிரதேசம்	—	16.3	,,
நாகாலாந்து	—	18.1	,,
ராஜஸ்தான்	—	20.2	,,
ஒரிசா	—	21.8	,,
மேற்கு வங்காளம்	—	25.2	,,
ஜம்மு காஷ்மீர்	—	26.8	,,
உத்திரப்பிரதேசம்	—	27.7	,,
குஜராத்	—	34.1	,,
இமாசலப் பிரதேசம்	—	37.9	,,
ஆந்திரப்பிரதேசம்	—	39.5	,,
கர்நாடகா	—	52.3	,,
மகாராஷ்டிரா	—	53.8	,,
பஞ்சாப்	—	74.9	,,
கேரளா	—	94.3	,,
தமிழ்நாடு	—	98.0	,,
அரியானு	—	100.0	,,

அரியானு தமிழ் நாட்டில் உள்ள ஒரு மாவட்ட அளவே உள்ள மாநிலம் என்பதால் அங்கே நூறுசதவிகிதம் போடப்பட்டிருக்கிறது. அரியானுவைப் போல பல பகுதிகளை கொண்ட நான்கைந்து மடங்குள்ள தமிழ்நாட்டில் அன்றைக்கு 98 சதவிகிதம் கிராமப்புற மக்களுக்கு மின்சார வசதியை செய்து கொடுத்திருக்கிறோம் என்பதற்காகத்தான் இந்த எடுத்துக் காட்டை நான் இங்கே குறிப்பிட்டேன்.

எனவே, இருபது அம்சத் திட்டத்தில் இந்த ஆட்சி மாத்திர மல்ல; தி. மு. கழக ஆட்சியிலும் அது ஒழுங்காக நிறைவேற்றப் பட்டு, இருபது அம்சத் திட்டத்தைப் பிரதமர் அவர்கள் அறிவிப் பதற்கு முன்பேகூட தி. மு. கழக ஆட்சியில் அந்தத் திட்டங்கள் எல்லாம் படிப்படியாக நிறைவேற்றப்பட்டன என்ற புள்ளி விவரங்களையெல்லாம் நானும், அன்று கல்வி அமைச்சராக இருந்த நாவலர் அவர்களும் சட்டசபையிலேயே எடுத்து விளக்கி யிருக்கிறோம்.

நிதி அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலுரையில் பேர வையில் கூறும்போது தமிழகம் எந்த அளவிற்கு என்னென்ன துறைகளில் வளர்ந்திருக்கின்றன என்பதற்கான பட்டியலை எல் லாம் கூறியிருக்கிறார்கள். நிதி அமைச்சர் குறிப்பிட்ட அந்த வளர்ச்சி எல்லாம் ஒரு சிலரை பணக்காரர்களாக்கத்தான் பயன் படக் கூடிய வளர்ச்சிகளே தவிர, மக்களுக்கு நன்மை செய்யக் கூடியதல்ல. அப்படியானால் சத்துணவு, சிறுர்களுக்கு சீருடை வழங்குதல் இவைகள் எல்லாம் மக்களுக்கு நன்மை செய்யக் கூடிய திட்டங்கள் அல்லவா என்றால் நான் அதைமறுக்கவில்லை. சத்துணவுஇன்னும் சத்துணவாகவழங்கப்படவேண்டும்; சீருடை அனைவருக்கும் தரப்பட வேண்டும் என்பதில் இருவேறு கருத்துக் களுக்கு இடமில்லை.

இன்னும் பொருளாதாரத் துறையில் வேலை வாய்ப்புக்களைப் பெற்று தங்களையும் தங்களுடைய குழந்தைகளையும் தாங்களே காப்பாற்ற கூடிய அளவிற்கு வசதிகளை, வாய்ப்புக்களை தமிழ் நாட்டில் உள்ள ஏழை எளிய மக்கள் பெற்றிருக்கிறார்களா என்ற கேள்விக்கு நாம் விடை காணவேண்டும்.

வேலை வாய்ப்பு இல்லாத மக்களுடையஎண்ணிக்கை குறைந் திருக்கிறதா? இந்த அரசின் சார்பில் வெளியிடப்பட்ட ஆறுவது ஐந்தாண்டுத் திட்டம் என்ற நூலில் வேலைவாய்ப்பைப் பற்றி என்ன கூறப்பட்டிருக்கிறது?

"வேலை வாய்ப்பின்மையை பொறுத்தமட்டில் ஏனைய மாநிலங்களைவிட தமிழ்நாடு மிகவும் மோசமான நிலையில் உள் ளது" என்று கூறுவது சாலவும் பொருத்தமாகும்.

அகில இந்திய அளவில் வேலையற்றவர்களின் எண்ணிக் கையை எடுத்துக்கொண்டால் தமிழகத்திற்குத்தான் முதலிடம். அதாவது 12.63 சதவிகிதமாகும். அடுத்து வருவது ஆந்திரப் பிரதேசம்—12.49 சதவிகிதம். அதற்கடுத்து வருவது மகாராஷ் டிரம்—11.93 சதவிகிதம்.

படித்துவிட்டு வேலையில்லாமல் இருப்பவர்களின் பிரச்சினையைப் பற்றி அந்தப் புத்தகத்தில் "படித்துவிட்டு வேலையில்லாமல் இருப்பவர்களின் பிரச்சினைதான் தமிழ்நாட்டில் குறிப்பிடத்தக்க பிரச்சினையாகும். மேலும் வேலை தேடி அலையும் பெண்களின் எண்ணிக்கை மிக வேகமாக உயர்ந்து கொண்டே வருகிறது" என்று எழுதப்பட்டிருக்கிறது.

1983-ம் ஆண்டு மட்டும் வேலைவாய்ப்பு கேட்டு பதிவுசெய்து கொண்ட விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை 5,25,767. இவர்களையும் சேர்த்து மொத்தமாக இப்போது பதிவேட்டில் உள்ளவர்களின் தொகை 15,36,391. ஆக 15,36,391 பேர் வேலைவாய்ப்புக் கோரி அந்தப் பட்டியலில் தங்களுடைய பெயர்களை இணைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது ஒரு மாநிலத்தின் வளர்ச்சியைக் காட்டாது. அதை நீங்களே ஒத்துக்கொகண்டு அரசாங்கத்தின் சார்பிலே வெளியிடப்பட்ட அந்தப் புத்தகத்தில் விரிவாக வெளியிட்டிருக்கிறீர்கள். அதைச் சுட்டிக் காட்டுவது குற்றச் சாட்டிற்காக அல்ல; நிலைமை விளக்கத்திற்காக.

தமிழகத்தில் பொருளாதார நிலைமை பற்றி 1984-ம் ஆண்டு இந்து பத்திரிகையில் எழுதப்பட்ட ஒரு தலையங்கத்தில் குறிப்பிட்ட சில பகுதிகள் மிக முக்கியமானவை.

"தமிழ் நாட்டில் பொருளாதார நிலைமை பற்றி அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கும் கணிப்புகள் எந்தவிதமான மகிழ்ச்சியையும் தருவதாக இல்லை. வேலை இல்லாத் திண்டாட்டத்தால் பாதிக்கப்பட்டோரைப் பொறுத்தவரை இந்தியாவில் தமிழ் நாடு முதல் இடத்தை வகித்த போதிலும்— தனி நபர் சாகுபடி நிலத்தைப் பொறுத்தவரை கனிப் பொருட்கள் கிடைப்பது குறைவு. சத்தற்ற உணவு, குறைந்த போஷாக்குதான் அன்றுட நிலவரம்.

"தேசிய சர்வே மதிப்பீட்டின்படி—தமிழ்நாட்டில் 57.2 சதவிகிதத்தினர் வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கின்றனர். இதில் இந்தியாவின் சராசரி 48.13 சதவிகிதம்தான்.

"மின்சார உற்பத்தி, தொழில் வளர்ச்சி ஆகிய இரு முக்கியத் துறைகளில் ஏற்பட்டிருக்கும் முடக்கம் தீர்க்கப்படவேண்டும். இந்தியாவில் மின்சார உற்பத்தி 81 சதவிதமாக இருக்க, தமிழகத்தின் நிலை மிகக் குறைவாக இருக்கிறது. இந்த மாநிலத்தில் உள்ள அனல்மின் உற்பத்தி நிலையங்கள் பெருமைப்படும் அளவிற்கு செயல்படவில்லை. இந்த மாநிலத்தின் மினசார

பற்றுக்குறைக்கு—சூட்டை ஆற்றுவதற்கு பயன்படும் தண்ணீர் பற்றுக்குறை, பாய்லரில் ஏற்படும் குறைகள், தரமற்ற நிலக்கரி, அந்த நிலக்கரியை வடக்கேயுள்ள சுரங்கங்களிலிருந்து இறக்குமதி செய்யும்போது ஏற்படும் போக்குவரத்துத் தடங்கல் ஆகியன காரணங்களாகக் காட்டப்படுகின்றன. இவை அனைத்தும்மாநில மின்சார போர்டின் நிர்வாகத்திற்கு விடுக்கப்படும் அறை கூவல்தான். ஆனால், மாநில மின்சார வாரியம் இந்த அறை கூவலைச் சந்திக்கும் ஆற்றலை உருவாக்கிக் கொண்டதாகத் தெரியவில்லை.

மின்சார உற்பத்தியில் ஏற்படும் தடுமாற்றங்கள் தொழில் வளர்ச்சி முதலீட்டை தடை செய்வதாக இருக்கின்றன. புதிய தொழில் திறமையை கவர்வதற்கு செய்யப்படும் ஆக்கப்பூர்வமான முயற்சிகள் இன்னும் ஒருதரத்தை எட்டவில்லை. தொழில்களை பரவலாக்கும் நோக்கத்துடன் மாவட்ட தொழில் வளர்ச்சி மையங்கள் உருவாக்கப்பட்ட போதிலும் கிராமங்களில் தொழில் வளர்கின்ற அளவிற்கு இந்த மையங்கள் வேகமாகப் பணியாற்றவில்லை.

இந்த மாவட்ட மையங்களை மேற்பார்வையிட 1981 ஆம் ஆண்டு மாநில அளவில் அமைக்கப்பட்ட குழு 82 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் வரை ஒரு முறைகூட கூடவேஇல்லை என் பதை விமர்சகர்கள் உறுதியாகக் காட்டுகிறார்கள். மாநிலம் திறமையானவர்களைக் கொண்டிருந்த போதிலும் முக்கியமாக எது தேவைப்படுகின்றதென்றால் நன்கு ஆராய்ந்து எடுக்கப்படும் திட்டமும்—நன்மைகளை செய்யவேண்டும் என்ற உறுதியும்தான்"

என்று 25.1.84 இந்து பத்திரிகை தலையங்கத்தில் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறது.

நிதியமைச்சர் அவர்கள் துண்டுவிழுகின்ற நிலைமையைச் சமாளிக்க—வருமானத்தைப்பெருக்க சிலவரிகளை எல்லாம் விதித் திருக்கிறார்கள். நான் அதைப் பற்றி விமர்சிக்க விரும்பவில்லை. ஆனால் வருமானத்தைப் பெருக்க வேறு பல வழிகளும் இருக்கின் றன என்பதை நான் அவர்களுக்கு கோடிட்டுக் காட்ட விரும்பு கிறேன்.

நிதிநிலை அறிக்கையில் சாராயத்தின் மீதுள்ள ஆயத்தீர் வையை பல்க் லிட்டர் ஒன்றுக்கு நான்கு ரூபாயிலிருந்து ஆறு ரூபாயாகவும் விற்பனை வரியை ஆறுவிழுக்காட்டிலிருந்து இருபத் தைந்து விழுக்காடாகவும் உயர்த்தியிருக்கிறீர்கள். இப்படி வரியை உயர்த்தி இருப்பது அரசாங்கத்தின் வருமானத்தைப் பெருக்க என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள்.

அரசாங்கத்தின் வருமானத்தைப் பெருக்க வழி சொல்ல வேண்டியது எதிர்க் கட்சிகளின் கடமை. பேரவையில் பதில் சொல்லும்போது குறைகளை சுட்டிக் காட்டவேண்டியது எதிர்க் கட்சிகளின் வேலை. அவைகள் நியாயமானதாக — ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இருந்திடவேண்டும் என்ற கருத்தை அவர்களே தெரிவித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் நான் ஏற்கனவே பலமுறை கூறிய ஒரு விவரத்தை இந்த அவையிலும் சொல்லுவதின்மூலம் வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளுவதற்கான வழியை நிதி அமைச்சர் அவர்களுக்குக் குறிப்பிட விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் மொத்தம் ஒன்பது சாராய கலவைத் தொழிற்சாலைகள் இருக்கின்றன. இந்த தொழிற்சாலைகள்தான் தமிழ் நாட்டிற்குத் தேவையான முழு அளவு சாராயத்தையும் விற்பனை செய்கின்றன.

இந்த தொழிற்சாலைகளுக்கு இதுவரை அரசாங்கம் ஒருபாட்டில் சாராயத்திற்கு அனுமதித்துள்ள விலை ரூ. 7-41 காசுகள். (ஒரு பாட்டில் என்பது. 750 மில்லி லிட்டர் அளவு கொண்டதாகும். ஒரு லிட்டர் சாராயத்திற்கு அனுமதிக்கப்பட்ட விலை ரூ. 11.88)

ஒரு பாட்டில் சாராயம் 7.41-க்கு எப்படி அனுமதிக்கப்படுகிறது என்று பார்த்தால் ஒரு பாட்டில் சாராயத்திற்கு தேவையான எரி சாராயத்தின் விலை 85 காசுகள். இந்த எரி சாராயத்தோடு தண்ணீர் கலக்கப்பட்டு, அது பாட்டிலில் அடைக்கப்பட்டு விற்பனைக்கு வருகின்ற நேரத்தில் அதன் விலை ஒரு பாட்டிலுக்கு 7.41 ஆகிறது. அந்த வகையில் பாட்டில் ஒன்றுக்கு எக்சைஸ் வரி ரூ. 3-00; விற்பனை வரி 0-44; சர்சார்ஜ் 0.02 காசு ஆக இந்த மூன்றுக்கும் சேர்த்து 3.46; இவை போக எரி சாராயத்தின் விலை 0 85; காலி பாட்டிலுக்கு 2 00; பாட்டில் மூடி 0.25; லேபிளுக்கு 0.05; பேக்கிங் மெட்டீரியல் 0.17; போக்குவரத்துச் செலவு 0.30; வேஸ்டேஜ் 0.04; இவைகள் அல்லாமல் பாட்டில் ஒன்றுக்கு அனுமதிக்கப்பட்ட இலாபம் 0.29 காசு. ஆகமொத்தம் ஒரு பாட்டி அனுமதிக்கப்பட்ட விலை அரசாங்கத்தால் ரூ. 7.41.

பாட்டில் ஒன்றுக்கு அரசாங்கமே கலவைத் தொழிற்சாலைகளுக்கு 29 காசுகள் இலாபம் எடுத்துக் கொள்ளலாம் என்று அனுமதிக்கிறது. அடுத்து காலி பாட்டில் ஒன்றுக்கு அரசாங்கம் இரண்டு ரூபாய் அனுமதிக்கிறது. கலவைத் தொழிற்சாலைகள் ஒவ்வொரு முறையும் புதிய பாட்டில்களை வாங்கி உபயோகிக்

கிறார்களா என்றால் கிடையாது. பழைய பாட்டில்களையே ஐம்பது காசும், எழுபது காசும் கொடுத்து வாங்கித் திரும்பத் திரும்ப அந்தப் பழைய பாட்டில்களைத்தான் உபயோகிக் கிறார்கள். அந்த வகையில் பாட்டில் ஒன்றுக்கு அரசாங்கம் மறைமுகமாக அனுமதிக்கின்ற இலாபம் அறிந்தோ அறியா மலோ ஒரு ரூபாய் இருபத்தைந்து காசு. இதைத் தவிர மூடிக்கு இருபத்தைந்து காசு அனுமதிப்பதில் பத்து காசுகளுக்கு மேல் பாட்டில் ஒன்றுக்கு அந்தத் தொழிற்சாலைகளுக்கு ஆகவே ஆகாது. அந்த வகையில் பாட்டில் ஒன்றுக்கு பதினைந்து காசு இலாபமாக அந்தத் தொழிற் சாலைகளுக்குக் கிடைக்கிறது. அடுத்து பேக்கிங் மெட்டீரியல் என்பதில் அந்தத் தொழிற்சாலை கள் அவ்வப்போது பேக்கிங் செய்ய வெவ்வேறு பொருட்களை வாங்கிப் பயன்படுத்துவதில்லை. சோடா, கலர் போன்ற பாட் டில்களை விற்பனை செய்கிறார்களே, அவர்கள் பயன்படுத்துவதைப் போன்ற நிரந்தரமான மரப் பெட்டிகளை வாங்கி வைத்துக் கொண்டு அவைகளைத்தான் திரும்பத் திரும்பப் பயன்படுத்து கிறார்களே தவிர, அதற்காக புதிதாக எதையும் 'செலவழிப்ப தில்லை. எனவே, அதற்காக அரசாங்கம் அனுமதிக்கும் பதினேழு காசுகளில் பத்து காசுகள் அவர்களுக்கு நிச்சயமாக லாபம் கிடைக்கிறது. போக்குவரத்து வேஸ்டேஜ் என்றெல்லாம் அரசு அனுமதித்திருப்பது வெறும் வார்த்தைகளே தவிர உண்மை யாக அவைகள் செலவழிக்கப்படுவதல்ல. ஆக பாட்டில் ஒன் றுக்கு அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய இலாபம்.

அனுமதிக்கப்பட்ட இலாபம்	—	0.29
கார்லி பாட்டில் மூலமாக	—	1.25
மூடி	—	0.15
பேக்கிங் மெட்டீரியல்	—	0.10
ஆக மொத்தம்		1.79

எனவே பாட்டில் ஒன்றுக்கு அவர்களுக்கு மொத்தம் 1.79 இலாபம் கிடைக்கிறது. இதிலே கூட நிர்வாகச் செலவு (எஸ்டா பிளிஷ்மெண்ட்) போன்றவைக்களுக்காக கழித்துவிட்டால் கூட, மீதம் பாட்டில் ஒன்றுக்கு ஒரு ரூபாய் ஐம்பது காசுக்கு குறை வில்லாமல் இலாபம் கலைவத் தொழிற்சாலைகளுக்கு நிச்சய மாகக் கிடைக்கிறது.

பாட்டில் ஒன்றுக்கு 1.50 இலாபம் என்றால்—தமிழகத்தில் மொத்தம் எத்தனை பாட்டில்கள் மாதம் ஒன்றுக்கு விற்பனை

ஆகின்றன என்று பார்த்தால் 1983-ஆம் ஆண்டு 84 லட்சம் லிட்டர் சாராயம் தமிழகத்தில் மாதம் ஒன்றுக்கு விற்பனை ஆனதாக பேரவையில் முதலமைச்சர் அவர்கள் திட்டவட்டமாகத் தெரிவித்தார்கள், இப்போது அந்த விற்பனை பெருகி மாதம் ஒன்றுக்கு— என்ன தான் அண்ணு சமாதிக்கு முன்னுல் சென்று உறுதி எடுத்துக் கொண்டாலும் கூட, அதனைக் காதில் போட்டுக் கொள்ளாமல் நடப்பதின் காரணமாக அந்த 84 லட்சம் லிட்டர் சாராய விற்பனை, மாதம்ஒன்றுக்கு ஒருகோடியே ஐம்பது லட்சம் லிட்டர் என்கிற அளவிற்கு விற்பனை உயர்ந்திருக்கிறது.

ஒரு கோடியே ஐம்பது லட்சம் லிட்டர் சாராயம் என்பது 750மில்லி லிட்டர் பாட்டில்களில் அடைக்கப்படும்போது மொத்தம் இரண்டு கோடி பாட்டில்களாகின்றன. ஆக மாதம் ஒன்றுக்கு ஒன்பது கலவைத் தொழிற்சாலைகளின் மூலம் விற்பனையாகும் சாராய பாட்டில்களின் எண்ணிக்கை இரண்டு கோடி பாட்டில்களாகும்.

பாட்டில் ஒன்றுக்கு ஒன்றரை ரூபாய் இலாபம் என்றுல், இரண்டு கோடி பாட்டில்களுக்கு அந்தத் தொழிற்சாலைகளுக்கு மாதம் ஒன்றுக்கு கிடைக்கக்கூடிய இலாபம் மூன்று கோடி ரூபாயாகும். மாதம் மூன்று கோடி ரூபாய் இலாபம் என்றுல், ஆண்டு ஒன்றுக்கு முப்பத்தாறு கோடி ரூபாய் அந்த ஒன்பது தொழிற் சாலைகளுக்கும் இலாபமாகக் கிடைக்கிறது.

இது ஒன்பது குடும்பங்களுக்குச் செல்கிறதா? அல்லது இவைகள் எல்லாமே பிணுமியாக ஒரேயொரு குடும்பத்திற்குச் செல்கிறதா என்ற அந்த ஆராய்ச்சியில் நான் இந்த அவையில் இறங்க விரும்பவில்லை.

ஆனுல், இது ஒன்பது பேருக்குச் சென்றுலும் சரி, ஒருவருக்குச் சென்றுலும் சரி— இதை ஆராய்ந்து பார்த்தால் இந்த முப்பத்தாறு கோடி ரூபாய் இலாபத்தை அரசாங்கமே பெறுகிற அளவிற்கு ஏன் அரசுடமையாக ஆக்கக் கூடாது என்றுதான் நான் நிதியமைச்சரைக் கேட்க விரும்புகிறேன்.

இந்தப் பொருள் குறித்து 1983–ம் ஆண்டு நான் பேரவையில் விளக்கிப் பேசினேன். பேசியதற்குப் பிறகு, பேசியதன் விளைவாக என்று நான் கருதிக்கொண்டிருக்கிறேன்: எதன் விளைவாகவோ எனக்குத்தெரியாது. பேசியதன் விளைவாக என்றுல் நான் நன்றி கூறிக்கொள்கிறேன்.

சாராய மொத்த வியாபாரத்தை அன்றைக்கு அரசாங்கமே எடுத்துக்கொண்டு அதன் காரணமாக பல கோடி ரூபாய் அரசாங்கத்திற்கு வருமானம் வந்து— அதிலே சிறு தவறு நடைபெற்று பலகோடி ரூபாய் வருமான வரியாக— ஏழு கோடியோ, எட்டு கோடியோ தெரியவில்லை — கட்டவேண்டிய நிலைமை ஏற்பட்டு — இந்த ஆண்டு அதைத் தவிற்பதற்காக 'வெண்ட்பி' என்ற வகையில் அந்தத் தொகையை அரசாங்கமே வசூலித்துக் கொண்டு வருமான வரி கட்ட முடியாத நிலைமை ஏற்பட்டு, அந்த லாபம் அனைத்தும் சாராய மொத்த வியபாரத்தை அரசாங்கமே எடுத்துநடத்துகின்ற காரணத்தால் பலகோடி ரூபாய் அரசாங்கத்திற்கு கிடைக்கும் என்று கருதுகிறேன். எனவே, அதைப்போலவே நான்கூறிய யோசனையையும் ஏற்றுக்கொண்டு தமிழகத்தில் ஒன்பது பேர் மட்டும் அனுபவிக்கின்ற முப்பத்தாறு கோடி ரூபாய் இலாபத்தை அரசாங்கமே பெறுவதற்கான வழிவகை செய்ய வேண்டும்.

ஒருவேளை சொல்லக்கூடும். கடந்த ஆண்டு முதலமைச்சர் அவர்கள் வரும் செப்டம்பர் மாதத்தில் மீண்டும் மதுவிலக்கைக் கொண்டு வருவேன் என்றும்; சாராயக் கடைகளை எல்லாம் மூடுவேன் என்றும் அறிவித்திருப்பதால் இந்த நான்கைந்து மாதங்களுக்காக கலவைத் தொழிற்சாலைகளையெல்லாம் அரசாங்கம் எடுத்துக் கொள்ளத் தேவையில்லை. செப்டம்பர் மாதத்தில் முதலமைச்சரின் உறுதிமொழி நிறைவேற்றப்படுமேயானால் — மதுவிலக்கு மீண்டும் அமலுக்கு வருமேயானால் இதை நிறைவேற்ற வேண்டிய அவசியம் இல்லை. அரசு எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியமில்லை. ஆனால் உறுதிமொழி எத்தனையோ முறை கொடுத்ததைப் போல இந்த ஆண்டும் கொடுத்த உறுதிமொழி— மதுவிலக்கு வராது என்று திட்டவட்டமாக உங்களுக்குத் தெரியுமேயானால், நீங்கள் இதை எடுத்துக் கொள்வதின் மூலமாக தனியாருக்குப் போகும் முப்பத்தாறு கோடி ரூபாய் அரசாங்கத்திற்குக் கிடைக்கும் என்று— "ஏதாவது திட்டவட்டமான யோசனைகளை, வழிவகைகளைச் சொல்லக் கூடாதா" என்று கேட்கின்ற நிதியமைச்சர் நாவலருக்குச் சொல்லிக் கொள்கிறேன்.

பேரவையில் பேசும்போது நிதியமைச்சர் அவர்கள் "ஏழாவது நிதிக் கமிஷன் கையாண்ட அணுகுமுறை, வாய்ப்பாடு பின்பற்றப்பட்டிருக்கு மேயானால்கூட தமிழகத்திற்கு அதிகப்படியாக 380 கோடி ரூபாய் கிடைத்திருக்க முடியும். ஊக்கம், செயலாற்றும் திறன், நியாய நீதி அடிப்படையில் தமிழகத்துக்கு உரிய நிதிப் பங்கீடு செய்யப்படவில்லை" என்பதையும், "மத்திய

அரசு முதலீடு செய்து நடத்தும் பெரும் தொழில்கள் ஆகியவை மற்ற மாநிலங்களைவிட இங்கு குறைந்து கொண்டே வருகிறது'' என்பதையும், எட்டாவது நிதிக் கமிஷன் நமக்கு நியாயம் வழங்கும் என்று எதிர்பார்த்திருந்தோம்; மாறுக தமிழகம் வஞ்சிக்கப்பட்டிருக்கிறது'' என்பதையும் — இவைகள்எல்லாம் மத்திய அரசிடம் இருந்து வாதாடி, போராடி பெறுத தமிழக அரசை நோக்கி எதிர்க்கட்சிகள் சார்பில் சாட்டப்படும் குற்றச் சாட்டு என்றுலும்— இந்தக் குற்றச் சாட்டுக்களை எல்லாம் ஏற் றுக்கொண்டு நாவலர் அவர்களே மத்திய அரசு தமிழகத்தை வஞ்சிக்கிறது; நிதிக்கமிஷன் வாயிலாக வஞ்சிக்கிறது என்ற பேருண்மையை ஒத்துக் கொண்டு, எதிர்க்கட்சிகளோடு சேர்ந்து கொண்டு அவரும் சோகக் கீதம் பாடியிருக்கிறுர் என்றுலும் கூட, அந்த அளவிற்கு நிலைமைகளை அவர் விளக்கியிருப்பதற்காக நான் அவருக்கு நன்றிகூற கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில் மத்திய அரசின் உதவிகளை மாநில அரசு பெற தி.மு. கழகத்தின் சார்பாக எந்த அளவிற்கு இந்த அர சுக்கு ஒத்துழைப்பு தரமுடியுமோ அந்த அளவிற்கு கடந்தகாலத் திலும் அப்படிப்பட்ட ஒத்துழைப்பை தி.மு. கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாநிலங்கள் அவை உறுப்பினர்கள் அங்கே தந் திருக்கிறுர்கள். சட்டமன்றத்திலும் தந்திருக்கிறுர்கள். அதைப் போலவே தொடர்ந்து மத்திய அரசிடமிருந்து தமிழகத்திற்கு வரவேண்டிய நியாயமான உதவிகள் கிடைக்க கழகம் ஒத்து ழைக்கும் என்ற உறுதியை நான் நிதியமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒன்றைக்குறிப்பிட்டு இந்த நேரத்தில் நான் அவரிடமிருந்து விளக்கம் பெற விரும்புகிறேன். நாவலர் அவர்கள் அவருடைய பதில் உரையில் ஒன்றைச் சொன்னுர்கள். "மாநிலங்களுக்கு மைய நிதி ஒதுக்கீட்டைப் பொறுத்தவரையில் 1951–ம் ஆண்டு மக்கள் தொகை அடிப்படையை வைத்து நிதி ஒதுக்கம் செய்ய வேண்டும் என்று தொடர்ந்து வற்புறுத்தி வருகிறோம். இப் போதைக்கு 1971-ம் ஆண்டு மக்கள்தொகையை அடிப்படையாக வைத்து முடிவுசெய்ய மைய அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. இதன் காரணமாக நல்ல திட்டங்களை வகுத்து வளமான எதிர் கால சமுதாயத்தை உருவாக்கும் பணியிலும் மக்கள் தொகை கட்டுப்படுத்துதல் போன்ற திட்டங்களை செம்மையாக நிறை வேற்றியும் கூட, தமிழகத்திற்கு ஊக்குவிக்கும் வகையில் பரிசு கிடைப்பதற்குப் பதிலாக தண்டனைதான் வழங்கப்பட்டுள்ளது'' என்று கூறியிருக்கிறுர்.

பதில் உரையில் இவ்வாறு விளக்கியிருக்கும் நாவலர் அவர்கள் இந்த அவையில் அவர்படித்த நிதிநிலை அறிக்கையிலே என்ன கூறியிருக்கிறார் என்றால், (நிதிநிலை அறிக்கை பக்கம் 59-ல் குறிப்பிட்டிருக்கிறார்) "மக்கள் தொகை அடிப்படையில் நிதி உதவியின் அளவை நிர்ணயிக்கும்போது 1971-ம்ஆண்டு மாநிலங்களில் இருந்த மக்கள் தொகையை அடிப்படையாகக்கொள்ள வேண்டுமென மத்திய அரசு சரியான முடிவை எடுத்திருந்த போதிலும்..." என்று குறிப்பிடுகிறார்.

51-ம் ஆண்டு மக்கள் தொகை அடிப்படை என்பதுதான் சரியான முடிவு. அதை மத்திய அரசு ஏற்றுக் கொள்ளவில்லை என்று பதிலுரையில் தெரிவித்த அதே நாவலர் நிதிநிலை அறிக்கையிலேயே 1971-ம் ஆண்டு மாநிலங்களில் இருந்த மக்கள் தொகை அடிப்படையாகக் கொள்ளவேண்டுமென மத்திய அரசு சரியான முடிவை எடுத்ததாகக் குறிப்பிடுகிறார்.

நான்கூட மொழி பெயர்ப்பில் தவறு ஏற்பட்டிருக்குமோ எனக்கருதி நிதிநிலை அறிக்கையில் ஆங்கில வெளியீட்டைப் படித்துப்பார்த்தேன். அதிலேயும் "Government of India had taken the right decision of freezing the population of States at the 1971 level" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. எனவே நிதிநிலை அறிக்கையில் சரியான முடிவு என்று தெரிவித்த அதே கருத்தை பதிலுரையில் தண்டனை என்று நிதியமைச்சர் கூறியது விநோதமானதாகும். அதற்கு என்ன காரணம் என்று புரியவில்லை.

நிதியமைச்சர் நாவலர்: 1951-ம் ஆண்டு மக்கள் தொகையைத் தான் நாம் அடிப்படையாகக் கொள்ள வேண்டுமென்று வலியுறுத்துகிறோம். கடைசியில் இந்த அளவிற்காவது வந்தார்களே என்ற வகையில்தான் அப்படி வெளியிடப்பட்டிருக்கிறது.

தலைவர் கலைஞர்: இந்த விளக்கத்தை நான் ஏற்றுக் கொள்வதற்கு முன்னால் வரவு செலவுத் திட்ட அறிக்கை நூலில் தவறு ஏற்பட்டிருக்கலாம். அதிகாரிகள் கொடுத்ததை நாவலர் படிக்கத் தவறியிருக்கலாம். அதனால் ஏற்பட்ட விளைவாக இருக்கலாம். எப்படியிருந்த போதிலும் அதை சரியான முடிவு என்று சொல்லக் கூடாது. ஒரு முடிவு என்றுதான் சொல்லியிருக்க வேண்டும். இதை மாநில அரசின் மீதுள்ள அக்கறை காரணமாகச் சொல்கிறனே அல்லாமல் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் போது — மத்திய மாநில அரசுகளின் பங்கு எந்த அளவிற்கு இருந்தது என்றுல் ஐம்பது—ஐம்பது சதவிகிதம் என்ற நிலையில்தான் இருந்தது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின்போது மத்திய அரசின் உதவி 25.8 சதவிகிதம் என்ற அளவிற்குக் குறைந்தது. ஐந்தாண்டு திட்டத்தின் போது மத்திய அரசின் பங்கு 26.5 சதவிகிதம் என்ற அளவிற்குக் குறைந்தது. ஆறுவது ஐந்தாண்டுத் திட்டத்தின் போது 21 சதவிகிதம் என்ற அளவிற்கு மத்திய அரசின் பங்கு குறைந்து தற்போது மாநில அரசுகளின் பங்கு 79 சதவிகிதம் என்ற அளவிற்கு ஆகியிருக்கிறது.

இது மத்திய அரசு தொடர்ந்து மாநிலங்களுக்கு இழைத்து வருகின்ற தீமைகளில் ஒரு கூறு என்பதை நானும் இந்த அரசோடு சேர்ந்து எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மத்திய அரசு எழுப்பிய மொத்த கடன்தொகையில் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் போது 76 சதவிகிதம் மாநிலங்களுக்காக என்று வரையறுக்கப்பட்டிருந்த நிலைமை மாறி, இப்போது மாநிலங்களின் பங்கு 23 சதவிகிதம்தான் என்ற அளவிற்கு குறைந்து மீதியுள்ள 77 சதவிகிதம் மத்திய அரசுக்கு என்கிற அளவிற்கு உயர்ந்திருக்கிறது.

இவைகள் எல்லாம் நாவலர் பதிலுரையில் குறிப்பிட்டிருப்பதுபோல தமிழ் மாநிலம் நிதிக்கமிஷனுல் வஞ்சிக்கப்படுகிறது-மத்திய அரசால் வஞ்சிக்கக்கப்படுகிறது என்பதற்கு மேலும் உள்ள ஆதாரங்கள் ஆகும். எனவேதான் மத்திய அரசோடு வாதாடுகின்ற அந்தப் போர்க்குணம் மாநில அரசுக்குத் தேவை என்பதை எடுத்துக்காட்டும் வகையில் மாநிலங்களின் போதுமான அதிகாரங்களைப் பெற்று மத்தியில் ஒருஉண்மையான கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி ஏற்படவேண்டும் என்ற கருத்தை நாங்கள் நீண்ட நாளாக வலியுறுத்தி வருகிறோம்.

1985-86-ம் ஆண்டிற்கான இந்த நிதிநிலை அறிக்கையில் மாத்திரமல்ல — 1983-84-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் கூட நாவலர் அவர்கள் தெளிவாக குறிப்பிட்டிருக்கிறார்கள். மாநில சுயாட்சி என்று குறிப்பிடவில்லை. தன்னுட்சி என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

"தேசிய ஒருமைப்பாட்டிற்கு ஊறு நேராவண்ணம் போதிய அதிகாரங்களோடு கூடிய தன்னுட்சி உரிமையை மாநிலங்கள் பெற வேண்டும்" என்று 83-84-ல் குறிப்பிட்டார்கள்.

நான் 83-84-ம் ஆண்டு வரவு செல்வுத்திட்ட விவாதத்தில் பேசும் போது நாவலர் அவர்களுடைய அந்தக் கருத்தை வரவேற்று பேசி மாநில சுயாட்சியைப்பற்றி 74-ம் ஆண்டு தி.மு. கழகஆட்சி இருந்தபோது சட்டப் பேரவையில் ஒரு தீர்மானம் கொண்டு வந்த போது, அண்ணு தி.மு. கழக உறுப்பினர்கள் அந்தத் தீர்மானத்தை ஏற்காமல், மாநில சுயாட்சி என்கிற வார்த்தையை அண்ணு அவர்கள் சொல்லவில்லை என்று குறிப்பிட்டு, அப்போது நானும் நாவலர் அவர்களும் அன்றைக்கு இருந்த தி.மு. கழக அமைச்சர் பெருமக்களும் அண்ணு அவர்கள் எந்தெந்த நேரத்தில் மாநில சுயாட்சி பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள் என்ற விளக்கங்களை யெல்லாம் அளித்து — அதற்குப் பிறகு அவர்கள் வெளிநடப்புச் செய்து — பிறகு மாநில சுயாட்சி தீர்மானத்தை தமிழகச் சட்டப் பேரவையில் நிறைவேற்றி — அந்தத் தீர்மானம் இங்கேயும் விவாதிக்கப்பட்டிருக்கிறது.

மாநில சுயாட்சியை இன்றைய அரசின் சார்பாக நிதி யமைச்சர் நாவலர் அவர்களும் நிதிநிலை அறிக்கையில் தொடர்ந்து சொல்லி வலியுறுத்திவருகிறார். 83-84-ம் ஆண்டிலும் குறிப்பிட்டார். இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலும் குறிப்பிட்டிருக்கிறார். ஆனால், அந்த 'ஸ்டேட் அடானமி' என்ற வார்த்தையை 'மாநில சுயாட்சி' என்ற சொல்லை இன்றைய முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்களா என்றுல் இல்லை. அதுபற்றி நான் அப்போதே கேட்டேன்.

முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் 1983 ஆம் ஆண்டு கொச்சிக்குச் சென்றிருந்தபோது மாநில சுயாட்சி பற்றி செய்தியாளர்கள் கேட்டபோது முதலமைச்சர் கூறிய பதிலை — இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் வெளி வந்ததை நான் படித்துக் காட்டினேன்.

'Tamil Nadu Chief Minister Mr. M. G- Ramachandran said here today he would welcome any move for a joint effort by the Southern States for more powers to States:

Any such move would have the full support of the Tamil Nadu Government he said answering at a crowded press conference "But we are not for State Autonomy" he clarified.

அதாவது 'மாநில சுயாட்சி' என்ற கொள்கைக்கு நான் ஆதரவு அல்ல என்று முதலமைச்சார் தெரிவித்ததாக இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையிலே வந்ததை நான் படித்தபோது —

முதலமைச்சார் குறுக்கிட்டு "இன்னொரு விளக்கத்தையும் நான் அங்கே சொன்னேன். அது பத்திரிகையில் வராததற்கு நான் பொறுப்பல்ல. 'ஸ்டேட் அடானமி' என்று சொன்னால் பிரிவினை என்று பொருள் கொடுத்துவிடும். ஆகவே, அந்த வார்த்தையை மட்டும் மறுக்கிறேன் என்று சொன்னேன். அது பத்திரிகையில் வரவில்லை' என்று சொன்னார்கள். நான் தொடர்ந்து உடனே சொன்னேன். "அது 'இந்து' பத்திரிகையில் வந்திருக்கிறது. அதையும் படிக்கிறேன் கேளுங்கள்" என்று கூறிவிட்டு அதைப் படித்துக் காட்டினேன்.

"Differentiating between autonomy and additional Powers for States, Mr. Ramachandran said he was hesitant to use the term "more autonomy" because it was understood as Separation"

இதையெல்லாம் நான் சட்டசபையில் 14-3-83 அன்று படித்துக் காட்டினேன். அப்போது அவர்கள் 'ஸ்டேட் அடானமி' என்ற வார்த்தையை ஏற்றுக்கொள்ள முடியாது. அது பிரிவினை என்ற வாதத்தை கிளப்புகிறது என்று சொன்னார்கள். அப்போது நாவலர் எழுதிய கட்டுரைகளை எல்லாம் படித்து காட்டினேன். மாநில சுயாட்சி கேட்பது பிரிவினை ஆகாது: தன்னுட்சிக்கும், தனியாட்சிக்கும் வேறுபாடு உண்டு; இரண்டிற்கும்உள்ள முரண் பாட்டை நாவலர் அவர்கள் அவருக்கே உரிய தனித் தமிழில் விளக்கியதை எல்லாம் படித்துக் காட்டினேன்.

இந்த அவையில் அது பற்றிய விவாதம் வந்தபோது நம் முடைய அவைத் தலைவர்—மாண்பு மிகு மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் அவர்கள் — அவர் ஒரு தேசியவாதி என்ற முறையில், இந்திய நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் ஈடு பட்ட தளபதிகளில் ஒருவர் என்ற முறையில் பேசினர். இங்கே அந்தத் தீர்மானத்திற்கு எதிர்ப்புக் குரல் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களால் கிளப்பப்பட்டது. ராஜாராம் நாயுடு போன் றவர்கள் அதை எதிர்த்துப் பேசியபோது பிரிவினையில் கொண்டு போய் அது விட்டு விடாதா என்று பேசியபோது, சிலம்புச் செல்வர், "இந்திய நாட்டின் விடுதலைக்காகப் போரிட்ட தேசிய வாதி சொல்கிறேன். இது பிரிவினை வாதம் அல்ல; இது 1937-38-ம் ஆண்டிலிருந்து சொல்லப்பட்டு வருகின்ற ஒரு கோரிக்கை, இது பிரிவினைவாதம் என்று சொல்லப்படுவதில் உண்மை இல்லை" என்று குறிப்பிட்டு விட்டு தொடர்ந்து சொன்னார்கள்.

அப்போது எங்களுக்கே ஒரு அறைகூவல் விட்டார்கள்.

"நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக அரசு இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றிய பின்னர் என்ன செய்யப் போகிறது? அது எனக்குத் தெரியவேண்டும். பேரவையில் தீர்மானம் நிறைவேற்றி விட்டோம். இங்கும் நிறைவேற்றப் போகிறோம். இதற்குப் பிறகு என்ன நிலைமை? கொள்கை ரீதியில் கூட மத்தியில் உள்ளவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்று தெளிவாகத் தெரிகிறது. ஏற்றுக் கொள்ளவும் மாட்டார்கள். அதை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. பிரச்சாரம் வேண்டுமென்று முதல்வர் அவர்கள் சொன்னார்கள். அவர் கருத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன். நாளைக்கு சென்னையில் மயிலையில் நானும் கலைஞரும் பேசுகிறோம் — மாநில சுயாட்சிப் பிரச்சாரம்தான். ஒன்றை மறந்துவிட வேண்டாம். அதாவது இந்த விஷயத்தில் நாம் போதிய அளவு பிரச்சாரம் செய்திருக்கிறோம். எனக்கு முந்தியே நீங்கள் பிரச்சாரம் தொடங்கினீர்கள். நீங்கள் பிரிவினை கேட்ட காலத்திலும் கூட, மத்திய ஆதிக்கத்தை எதிர்க்கிற அளவிலே மத்தியில் அதிகாரங்கள் குவிந்ததால் மக்கள் படுகிற வேதனைகளை விளக்கியிருக்கிறீர்கள். 1939-ம் ஆண்டிலிருந்தே அந்தப் பிரச்சாரம் நடந்து கொண்டிருக்கிறது. ஆக, நாம் நடவடிக்கை எடுக்கத் தாமதிப்பதனால் அது நம்மையே பலகீனப்படுத்துகிறது என்பதை நாம் நடைமுறையில் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இன்னும் தாமதிக்க அவசியமில்லை; தேவை இல்லை என்று எண்ணுகிறேன்" என்று அன்றைக்கு நம்முடைய மேலவைத் தலைவர் வீர முழக்கம் இட்டார்கள். இது மாத்திரமல்ல; இன்னும் சொன்னார்கள்.

"ம. பொ. சி.யின் கொள்கையை கலைஞர் எடுத்துக் கொண்டார். என்று யாரோ சொன்னார்களாம். ஆணவம் இல்லாமல் மட்டுமல்ல — சத்தியமாகச் சொல்கிறேன். இந்தத் தத்துவம் எனக்குச் சொந்தம் அல்ல, அகில உலகின் அரசில் சாத்திரம் — சரித்திரம் இது. 1781-ல் அமெரிக்காவில் தோன்றிய சமஷ்டி சாகாப்தம் பின்னல் விரிவடைந்து வருகிறது. நாடு நாடாக பவனி வருகிறது. அதற்காக ஒரு இயக்கத்தை துவக்கினவன் என்ற சிறப்பு எனக்கு இருக்கலாமேயொழிய, தத்துவமே எனக்கு ஏக போகமல்ல. கலைஞர் என் கையில் இல்லை. நான் கலைஞர் கையில் இருக்கிறேன். நான் கலைஞரை வேண்டுகிறேன் — அவரது ஆட்சியை வேண்டுகிறேன். இந்தப் பிரச்சனையில் எப்படி வேண்டுமானாலும் என்னைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

"எங்கோ கிடந்த எளியவனாகிய என்னை அழைத்து வந்து செகரட்டரியேட்டில் ஒரு அறை எனக்குக்கொடுத்து (ரூம் கொடுத்து)

என்னை இங்கு வைத்திருக்கிறீர்கள். உங்களை வேண்டுகிறேன். நான் இப்படி நெடு நாட்கள் அறைக்குள் அடைப்பட்டுக் கிடக்க விரும்பவில்லை. அந்த அறையை விட்டு இந்த மாநில சுயாட்சிக் காக சிறை புகவே விரும்புகிறேன். உங்கள் ராஜ்யத்தின் சிறைச் சாலைகளிலே எனக்கும் என் தோழர்களுக்கும் இடம் பார்த்து வையுங்கள். அந்தச் சிறைச்சாலைகளில் திறந்து வையுங்கள் அறை களை! இன்னொரு முறை இந்த ஏழைத் தொண்டன் நோயாளி யாக உள்ள நிலையில் சிறையில் அடைப்பட்டு அங்கு உயிர் விடுவேனுனால், எனது அஸ்தியிலிருந்து தோன்றுகின்ற பல லட்சக் கணக்கான தமிழ் வீரர்கள் மாநில சுயாட்சி தேட, என்னைவிட 19 வயது குறைந்தவரான கலைஞர் அவர்களுக்கு உதவி செய் வார்கள்'' என்று அன்றைக்கு முழக்கமிட்டார்கள். ஆனால் தொடர்ந்து அவர்கள் குறிப்பிட்டவாறு அந்தப் போராட்டத்தில் ஈடுபட முடியவில்லை.

சிலம்புச் செல்வர்: என்னைக் குறிப்பிடுவதால் நான் ஏதோ அந்தப் பிரச்சனையை விட்டுவிட்டேன் என்பதைப்போல தோன்று கிறதா? ஏனென்றால் இவ்வளவு நீளமாக என்னை இழுத்துப் பேசுவதால்...

தலைவர் கலைஞர்: நீங்கள் கைவிடவில்லை. கைவிட மாட்டீர்கள் என்பதும் எனக்குத் தெரியும். அப்போதே அதற்கான போராட் டத்தைத் தொடங்க வேண்டும் என்பதுதான் தங்களுடைய கருத்து. இன்னும் சொல்லப் போனால் ஒரு போராட்டத்தைக் கூட நீங்கள் நடத்தினீர்கள். ஆனால் இரண்டு மூன்றுமாதங்களுக் கெல்லாம் கழக ஆட்சி கலைக்கப்பட்டது. நெருக்கடிகாலம் வந்து விட்டது. மாநில சுயாட்சிக் கொள்கை தமிழ்நாட்டில் பிரச் சாரம் செய்யப்பட்டு, பிறகு தமிழ் மாநிலம் மாத்திரமல்லாமல் காஷ்மீர் வரையில் — மேற்கு வங்காளம் வரையில், ஆந்திரா வரையில் உள்ள தலைவர்கள் எல்லாம் ஒருங்குகூடி மாநில சுயாட்சி கருத்துக்கு ஆதரவு தருகின்ற வகையில் தங்களுடைய எண்ணங்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அதற்கான பல மாநாடுகள் கூடியிருக்கின்றன. பிரச்சாரம் தொடர்ந்து நடை பெற வேண்டும். நடைபெற்று இந்தியா ஒரு உண்மையான கூட்டாட்சி உள்ள நாடாக, அந்த உண்மையான பெடரல்செட்-அப்பில் ஆங்காங்கு மாநில சுயாட்சித்தன்மை கொண்ட மாநிலங்கள் அமைந்தால்தான், மக்களோடு நெருக்கமான தொடர்பு கொண்டிருக்கின்ற மாநில அரசுகள் மக்களுக்கு நன்மை செய்ய முடியும். இந்த மண்ணைப் பாதுகாக்கும் கடமை யைச் செய்யவேண்டிய மத்திய அரசு இந்த நாட்டைப்பாதுகாக் கவுமான ஒரு சூழ்நிலை ஏற்பட முடியும்.

மாநில சுயாட்சிக் கொள்கையில் தி.மு க. கழகம் அழுத்தந் திருத்தமாக இருந்து தொடர்ந்து அந்தக் கொள்கையில் உறுதி யாக இருந்து வருகிறது என்பதையும், அன்றைக்கு அவைத் தலைவர் எழுப்பிய போர்க்குரல் இன்றும் மங்கிவிடவில்லை என்ப தையும், அதற்கு என்றென்றும் தி.மு.க. கழகம் பாடுபடும் என்ப தையும் இந்த அரசாங்கத்திற்குத் தெரிவித்து, இந்த அரசும் தொடர்ந்து இதிலே குழப்பமான சிந்தனை இல்லாமல் ஸ்டேட் அடானமிக்கும் பிரிவினைக்கும் சம்பந்தம் இல்லை என்பதை உணர்ந்து செயல்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நாவலர் அவர்கள் அங்கே இருக்கின்ற காரணத்தால் மாநில சுயாட்சிக்கு கிடைத்த நன்மை அது என்று பலமுறை நான் சொல் லியிருக்கிறேன். அதனால்தான் ஒவ்வொரு வரவு செலவுத் திட்டத் தின்போதும் முதலமைச்சர் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் கூட, அந்த அறிக்கையிலே ஸ்டேட் அடானமி— தன்னுட்சி— மாநில சுயாட்சி போன்ற வார்த்தைகள் அதிலே இடம் பெறுகின்றன. அதற்காக இந்த நேரத்தில் நான் அவருக்கு நன்றி கூறிக் கொள்கி றேன்.

இந்த வரவு செலவுத் திட்டத்தில் நிதி அமைச்சர் அவர்கள் இலங்கை அகதிகளுக்காக தரப்படும் சலுகைகள், உதவிகள் இவைகளைப் பற்றியெல்லாம் குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் அது பற்றி அதிகமாக எடுத்துக் கூற விரும்பவில்லை. ஆனால் ஒன்று! அமைச்சர்கள் எல்லாம் கூட படித்திருக்க கூடும். ஜூனியர் விகடன் ஏட்டில் இலங்கை அகதிகள் எல்லாம் எப்படி யெல்லாம் சில அதிகாரிகளாலும், ஒப்பந்தக்காரர்களாலும் ஏமாற்றப்படுகிறார்கள் என்பது குறித்து இரண்டு கட்டுரைகள் வெளி வந்திருக்கின்றன.

'ஜூனியர் விகடன்' கட்சி சார்பான ஏடு அல்ல. அது தி.மு. கழகத்தையும் விமர்சிக்கும்; அ.தி.மு.க. வையும் விமர்சிக்கும்; மற்ற கட்சிகளையும் விமர்சிக்கும்.

அதே நேரத்தில் நாட்டு நிலவரங்களை ஆராய்ந்து ஆங் காங்கு இருக்கிற குறைபாடுகளை எடுத்துச் சொல்லி வருகின்ற ஏடாக இருக்கிறது. என்னைக் கூட விமர்சித்து சில நேரங்களில் எழுதியிருக்கிறது.

இருந்தாலும் அந்த ஏட்டில் இலங்கை அகதிகளுக்காக கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளின் நிலை எப்படியாகி இருக்கிறது எனபதைத் தெரிவித்து, அதற்கான புகைப்படங்களையும் வெளி

யிட்டிருக்கிறார்கள். அந்தப் படங்களை நான் நாவலர் அவர் களின் பார்வைக்குத் தருகிறேன். இப்படிக் கட்டித் தரப்பட்ட வீடுகள் ஒன்றல்ல; இரண்டல்ல; ஆயிரக்கணக்கான வீடுகள் மறு நாளே இடிந்து விழுந்து விடக்கூடிய அளவிற்கு வெறும் கற்களை அடுக்கி வைத்திருக்கிறார்கள்.

மத்தியஅரசு தருவதாக வாக்களித்து, மாநில அரசு வாங்கித் தருகின்ற கடன்களை அகதிகளுக்கு கிடைக்க வொட்டாமல் இடையிலே இருக்கின்ற ஒருசில அரசாங்க அதிகாரிகளும், அவர் களோடு ஒப்பந்தம் பேசிக் கொண்டிருக்கின்ற காண்ட்ராக்டர் களும் ஏமாற்றிப் பெற்றுக் கொண்டு, புதுக்கோட்டை மாவட் டத்திலும், நீலகிரி மாவட்டத்திலும் அந்த இலங்கை அகதிகளை திண்டாடவிட்டிருப்பதை அந்த ஏடு தெளிவாக எழுதியிருக் கிறது. இலங்கையிலிருந்து துரத்தப்பட்டு பரிதாபகரமாக தமிழ் நாட்டிற்கு வருகிற அகதிகளை மேலும் அவமானம் செய்வது கண்டிக்கத்தக்கது. தமிழகமும் இப்படித்தானே என்று அவர்கள் எண்ணுகின்ற நிலைமையை அந்த அகதிகளுக்கு ஏற்படுத்திவிடக் கூடாது.

இங்கே இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தி. மு. கழகத்தின் நிலை என்ன என்பதை ஏற்கனவே இங்கே பேசிய கழக உறுப் பினர்களான அருமை நண்பர் பி. டி. ஆர். பழனிவேல் ராசன் அவர்களும், எங்கள் கட்சியின் துணைத் தலைவராக இங்கேயிருக் கிற அருமை நண்பர் சாதிக்பாட்சா அவர்களும், நண்பர் மீனாட்சி சுந்தரம் அவர்களும் விளக்கியிருக்கிறார்கள். இலங்கைப் பிரச்சி னையைப் பொறுத்தவரையில் கழகத்தைப் பொறுத்து ஒரு போராட்டம் நடத்தத் தேவையில்லை என்று முதலமைச்சர் கூற வில்லை என்பதையும் நாவலர் அவர்கள் இங்கே நேற்று எடுத்து விளக்கியிருக்கிறார்கள்.

சர்வக் கட்சிக் கூட்டத்திற்கு கருணாநிதி ஏன் போகவில்லை என்று இந்த அவையில் மாண்புமிகு துணைத்தலைவர் சாமிநாதன் ஒரு பிரச்சினையை எழுப்பியது மாத்திரமல்லாமல், கடந்த காலத்தில் தி.மு. கழக ஆட்சியில் நடைபெற்ற சர்வக்கட்சிக் கூட்டங்களைப் பற்றி எல்லாம் விளக்கியிருக்கிறார்.

அவைகளை எல்லாம் ஞாபகத்தில் வைத்துக் கொண்டு பேசிய சாமிநாதன் அந்தச் சர்வக்கட்சி கூட்டங்கள் எதற்கும் என்னுடைய அருமை நண்பர்—அன்றைக்கு அ.தி.மு.க. கட்சியின் தலைவராக இருந்த எம்.ஜி.ஆர். அவர்கள் — வரவில்லை என்பதை

மறந்துவிடக் கூடாது. அவர்கள் வரவில்லை என்பதற்காக நீங்கள் வராமல் இருந்து விட்டீர்களா என்று கேட்டால் எங்களுக்கு பிரச்சினைதான் முக்கியமே தவிர வேறல்ல.

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக கூட்டப்பட்ட சர்வக் கட்சிக் கூட்டங்கள் இரண்டொன்றுக்கு நான் கடந்த முறை— 1983-ம் ஆண்டில் — சென்று கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிறேன். ஒருமுறை என்னுடைய கருத்துக்கள் எடுபடாத காரணத்தாலும் தனிமைப்படுத்தப்பட்ட காரணத்தாலும் வெளிநடப்புகூடச் செய்திருக்கிறோம். எனவே கலந்துகொள்ளவில்லை என்று சொல்ல முடியாது.

இன்னும் சொல்லப் போனால் கழகம் நடத்துகின்ற போராட்டத்திற்காக 31-ம் தேதி முதல் இந்த மாதம் முழுவதும் சுற்றுப் பயணத் திட்டம் வகுத்து அது பத்திரிகைகளிலும் போடப்பட்டு— 4, 5, 6, ஆகிய நாட்களிலும் பிறகு 8, 9, 10 ஆகிய நாட்களிலும் சென்னையில் இருப்பதாகவும் சுற்றுப் பயணத் திட்டம் வகுக்கப் பட்டிருக்கிறது. இருந்தாலும் கூட 2-ம் தேதி நான்எங்கே இருக்கிறேன் என்று பார்த்து, அந்தக் கூட்டத்தைக் கூட்டுவதுபோல் அறிவித்து அது எங்களுக்கு 31-ம் தேதி கிடைத்தது. எனவே எங்களுடைய கட்சியைப் பொறுத்தவரை ஆள்ஆளுக்குத் தனியான கருத்து என்றில்லாமல் ஒரு முகமாகக்கூடி செயற் குழுவிலே எடுக்கின்ற கருத்தை சர்வகட்சிக் கூட்டத்தில் முதல் நாள் அன்று கழகப் பொருளாளர் சாதிக் அவர்களும், டி. ஆர். பாலு அவர்களும் கலந்து கொண்டும், மறுநாள் கொள்கைப் பரப்புச் செயலாளர் கந்தப்பன் அவர்களும், டி. ஆர். பாலு அவர்களும் கலந்துகொண்டும் கழகக் கருத்துக்களை அங்கே எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

83-ம் ஆண்டிலிருந்து இதுவரை இந்தப்பிரச்சினை தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டே இருக்கிறது. இன்னமும் பிரதமரைச் சந்தித்து மகஜர் கொடுப்பது என்ற நிலைமை இருந்தால் போதுமானதா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். 83-ல் கொடுத்த மகஜருக்கு இதுவரை என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது?

அந்த மகஜரில் — "இலங்கையில் உள்ள தமிழர்களின் பாதுகாப்பிற்கு உறுதி ஏற்படுத்தவும், நிர்வாகத்தில் மீண்டும் அமைதியை உண்டாக்கவும், ஐக்கிய நாடுகள் சபை உலக முழுவதிலுமிருந்து பார்வையாளர்கள் கொண்ட குழுவை உடனடியாக நியமிக்க வேண்டியது அவசியமாகிறது. இந்தப்பிரச்சினை ஐ.நா. சபையில் உடனடியாக எழுப்பப்பட வேண்டும். இலங்கை அரசும்

ராணுவமும் கட்டவிழ்த்து விட்டிருக்கின்ற படுகொலைகளுக்கு ஒரு முற்றுப்புள்ளிவைக்க ஐ.நா. வின் பாதுகாப்பு கவுன்சிலிலும், இந்தப் பிரச்சனையை உடனடியாக எடுக்கப்பட வேண்டும். இலங்கைக்கு ஐ. நா. சபையின் படைகளை அனுப்புவதின் மூலம் மட்டுமே இதனை திறமையாகச் செய்ய முடியும்.

அதே சமயத்தில் இலங்கையிலே நடைபெறும் இனப் படுகொலைகளை நிறுத்த கூட்டு சேரா நாடுகளின் ஒத்துழைப்பையும் பெற்றிட வேண்டும். காமன்வெல்த் நாடுகளுக்கிடையே இதற்கான தீர்வைக் கேட்டிட வேண்டும். உயர்மட்ட உலக அளவிலான தூதுக்குழு ஒன்று இந்திய வெளி விவகாரத்துறை அமைச்சர், இந்தியப் பாதுகாப்புத்துறை அமைச்சர் தமிழகத்திலுருந்து சில பிரதிநிதிகள் அடங்கிய குழு எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் இலங்கைக்கு அனுப்ப ஏற்பாடு செய்ய வேண்டும். பங்காளதேஷ் மக்கள் தொந்தரவிற்கு ஆளாகிய நேரத்திலும், பாலஸ்தீன அகதிகள் பிரச்சனையிலும் உலகம் முழுவதும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய உதாரணங்களை எல்லாம் இந்தக் குழு நன்கு தெரிந்து வைத்திருக்கிறது. அதே வழியில், மேலும் தாமதம் ஆவதற்கு முன்பு இந்திய அரசு இலங்கையிலே உள்ள தமிழர்களின்—அவர்கள் சிங்கள குடியுரிமை பெற்றவர்களானலும் இந்தியர்களானலும் நாடற்றவர்களானலும்—துயரங்களைத் துடைப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.''

—என்ற இந்தக் கருத்துக்களை எல்லாம் அந்த முறையீட்டில் வைத்து பிரதமர் இந்திரா காந்திக்கு 1983-ம் ஆண்டு ஜூலை 31-ம்தேதி கொடுக்கப்பட்டது.

திரு. சாமிநாதன் : 1972-ல் காவேரி பிரச்சினைக்காக சர்வக் கட்சிக்கூட்டங்கள் நடைபெற்றன. மத்திய அரசு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதனுல் பேசுவதில் பயனில்லை என்று யாரும் அந்தப் பிரச்சினையை ஒதுக்கிவைத்துவிடவில்லை. எனவே, இப்போது மட்டும் இந்த அரசை குறை கூறவது எப்படி நியாயம்?

தலைவர் கலைஞர் : நான் இந்த அரசைக் குறைகூறவே இல்லை. இங்கு மாத்திரமல்ல; நான் பேசுகின்ற போராட்ட விளக்கப் பொதுக்கூடங்களில்கூட இந்த அரசை குறைகூறி ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லை. இந்த அரசு தன்னுல் இயன்ற அளவு கடமையைச் செய்து வருகிறது மத்திய அரசைக்கூட—வலியுறுத்தித்தான் இந்தப் போராட்டமே தவிர, மத்திய அரசை எதிர்த்து இந்தப் போராட்டம் என்று நாங்கள் சொல்லவில்லை.

காவேரி பிரச்சினையில் தமிழக அரசு அன்றைக்கு இப்படிப் பட்ட நடவடிக்கைகளை கையாண்ட நேரத்தில் பல நேரங்களில் விவசாயிகள் தனிப்பட்ட முறையில் போராட்டம் நடத்தியிருக் கிறார்கள். அதைப் போலத்தான் அரசு கடமையைச் செய்தா லும் அந்த விவசாயிகளைப் போல நாங்கள் போராடுகிறோம். மேலும் காவிரிப் பிரச்சினையோடு இதை சம்பந்தப்படுத்துவது அவ்வளவு சரியல்ல. இலங்கைப் பிரச்சினை தினந்தோறும் தமி ழர்கள் செத்துக் கொண்டிருக்கின்ற பிரச்சினை. காவேரிப் பிரச் சினையில் சிலர் தவறுக அந்த ஒப்பந்தம் காலாவதியாகி விட்ட தாகக் கூடப் பேசுகிறார்கள். அது தவறு. அந்த ஒப்பந்தம் காலாவதியான ஒப்பந்தம் அல்ல. அது புதுப்பிக்கப்பட வேண் டியதாகும். உபரித் தண்ணீரை எப்படிப் பயன்படுத்திக் கொள்வது என்று ஒப்பந்தத்தைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டும். அதில் அன்றைக்கு இருந்த அரசும் இன்றைக்கு இருக்கின்ற அரசும் அங்கேயிருக்கின்ற முதலமைச்சர்களிடத்தில் கேட்கிற நேரத்தில், விவசாயிகளை காயவிடாமல் கூடுமானவரை தண்ணீர் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே இந்த இரண்டு பிரச்சினையையும் பொருத்துவது அவவளவு சரியல்ல.

திரு. சாமிநாதன் : காவேரி பிரச்சினை தீர்வதற்குள்ளாகவே பிரதமரின் பேச்சைக்கேட்டு வழக்கை வாபஸ் பெற்றது ஏன்?

தலைவர் கலைஞர் : உங்களை எல்லாம் கேட்டுக்கொண்டுதான் அந்த வழக்கு வாபஸ் பெறப்பட்டது. அன்றைக்குப் பிரதமர் இந்திரா காந்தியே கேட்டுக் கொண்டார்கள். நீங்கள் வழக்கை வாபஸ் பெற்றுக் கொள்ளுங்கள்; வழக்கு இருந்தால் மூன்று மாநில முதலமைச்சர்களையும் வைத்துக்கொண்டு பேச முடியாது என்று கூறினார்கள்.

ஜெகஜீவன்ராம் அவர்கள் தலைமையில் உட்கார்ந்து பேசி முடிவெடுக்கப்பட்டு கையெழுத்து போடுகின்ற நேரத்தில்— நாங்கள் ஒப்புக்கொண்டதற்கு மாறுக ஒப்பந்தம் இருந்த கார ணத்தால் நானும் அன்றைக்கு டெல்லிக்குச் சென்றிருந்த சாதிக் பாட்சா, ப.உ. சண்முகம், மாதவன் ஆகியோரும் கையெழுத்துப் போடாமல் திரும்பி வந்து விட்டோம். காவேரி பிரச்சனையில் அன்றைக்கு இருந்த அரசாங்கம் எடுத்த அதே நிலையில் இன் றைக்கு இருக்கின்ற தமிழக அரசும் இருந்துவருகிறது. காவேரிப் பிரச்சனையில் விட்டுக் கொடுக்கக் கூடாது என்பதில் எதிர்கட்சி யாக இருந்தாலும் ஆளும் கட்சியாக இருந்தாலும் ஒரே கருத் தோடு இருக்கிறோம். ஆனல் இலங்கைத் தமிழர் பிரச்சனை அப்படி இல்லை.

அடுத்து நம்முடைய வேளாண்மைத்துறை அமைச்சர் — அவரை நான் தம்பி என்று சொல்வதா? நண்பர் என்று சொல்வதா? என்று எனக்குப் புரியவில்லை.

அமைச்சர் காளிமுத்து : திராவிட இயக்கக் குடும்பத்தைச் சேர்ந்த அனைவரும் சகோதரர்கள்தான். தம்பி என்றே சொல்லுங்கள்.

தலைவர் கலைஞர் : என்னை அகதி என்று வர்ணித்த அருமைத் தம்பி காளிமுத்து...

அமைச்சர் காளிமுத்து : என்னை கிறுக்கன் என்று முரசொலி வர்ணித்தது...

தலைவர் கலைஞர்: நான் அவரை எப்போதும் அப்படி வர்ணித்ததே இல்லை. நான் அப்படி சொன்னதாக எடுத்துக் காட்டினால் நான் அதற்காக வருத்தம் தெரிவித்துக் கொள்கிறேன். என்றைக்கும் நான் அப்படி எழுதியதில்லை. அவர் சொன்னதற்கு முரசொலியில் அப்படி பதில் வந்திருக்கலாம்.

எனவே இலங்கைத் தமிழர் பிரச்சினையில் நிறைவேற்றப்படுகின்ற சர்வ கட்சித் தீர்மானம் எப்படி அமைகிறதோ அதைப் பொறுத்து எங்கள் முடிவுகள் எடுக்கப்படும் என்று, நேற்று கழகப் பொருளாளர் சாதிக் அவர்களும் பி. டி. ஆர். பழனிவேல் ராஜன் அவர்களும் இங்கே விளக்கியிருக்கிறார்கள்.

இப்படி தாமதம் செய்வது குறித்து அமைச்சர் காளிமுத்து அவர்கள் எழுதியுள்ள புத்தகத்தில் "இந்திய ராணுவத்திடம் துப்பாக்கி இருப்பது நவராத்திரியிலே கொலு வைத்து அழகு பார்ப்பதற்காகவா" என்று அழகாகக் கேட்கிறார். மேலும் அந்தப் புத்தகத்தில் எழுதுகிறார். "வேடிக்கையான ஒரு நாட்டுப் பாடல் பாடுவார்கள். இலங்கைக்கு தன் கணவனை அனுப்புகிறாள் ஒரு மனைவி. அவன் திரும்பி வருகிறான். மனைவி கேட்கிறாள் : 'கண்டிக்குப் போன மச்சான்; கடல் கடந்து போன மச்சான் என்ன மச்சான் வாங்கி வந்தே?" என்று கேட்கிறாள். அதற்குக் கணவன் சொல்கிறான் : "கண்டியிலே ஆறு மாதம்; கப்பலிலே ஆறு மாதம்; சீக்கிலே ஆறு மாதம்; செலவழிந்து போச்சுதேயடி" என்கிறான். அதைப் போல இலங்கை இனப்படுகொலை நடந்து மூன்று மாதங்கள் ஆகிவிட்டன; பிரச்சினைகள் முடியவில்லையே; கவலை தெரிவிப்பதிலே ஒரு பத்து நாட்கள்; கண்டனம் தெரிவிப்பதிலே ஒரு பத்து நாட்கள்; நரசிம்மராவை அனுப்புவதிலே ஒரு வாரம்; பார்த்தசாரதியை அனுப்பிப் பேசியதிலே பத்து நாட்கள்' என்று தன்னுடைய கவலையை—ஆழ்ந்த வேதனையை அமைச்சர் காளிமுத்து வெளிப்படுத்துகிறார்.

மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் : இவ்வளவு புத்தகங்களையும் படித்திட உங்களுக்கு எப்படித்தான் நேரம் கிடைக்கிறது?

அமைச்சர் காளிமுத்து : மற்றவைகளைப் படிக்காவிட்டாலும் அவரால் உருவாக்கப்பட்ட இந்தத்தம்பியின் புத்தகங்களைப் படித்திட நிச்சயம் நேரம் இருந்திடும்.

தலைவர் கலைஞர் : அது மாத்திரமல்ல; ஈழத் தமிழகம் உருவாவதில் தி மு. கழகத்தின் கருத்துக்கும், அ. தி. மு. க. விலே அமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு காளிமுத்து அவர்களுடைய கருத்துக்கும், மேலவை உறுப்பினராக இருக்கின்ற ஜனார்த்தனம் அவர்களுடைய கருத்துக்கும் வேறு சில அ. தி. மு. க. உறுப்பினர்களின் கருத்துக்களுக்கும் ஒற்றுமை இருக்கிறது. அமைச்சரவையிலே இருக்கின்ற மற்றவர்கள் எப்படிக் கருதுகிறார்கள்? முதலமைச்சர் என்ன கருதுகிறார்? என்பது தெரியாது.

காளிமுத்து அந்த நூலிலே எழுதுகிறார் : "சிங்களவர்களும் தமிழர்களும் சேர்ந்து வாழவேண்டும் என்று யார் சொன்னாலும் சரி; அவர்கள் ஜெயவர்த்தனேயின் கைக்கூலிகள்; அவர்கள் ஜெயவர்த்தனேயின் கங்காணிகள்; மானமுள்ள தமிழர்களாகவோ மனிதாபிமானமுள்ள மனிதர்களாகவோ அவர்களை ஏற்றுக் கொள்ள நான் தயாராக இல்லை. திராவிட இயக்கத்தைச் சேர்ந்த எவனும்— தமிழனுக்குப் பிறந்த எவனும்— இலங்கையிலே தனி நாடு கூடாது என்று நிச்சயமாகச் சொல்லமாட்டான்."

இதைப் படித்த பிறகு தனி நாடு கூடாது என்று நாங்கள் சொல்ல முடியுமா? இலங்கையிலே தனிநாடு வேண்டுமென்று தம்பியே இந்த அளவிற்கு அறைகூவல் விடும்போது, அண்ணன் தனி நாடு தேவையில்லை என்று சொல்வான்? காளிமுத்து அவர்களின் கருத்தை நம்முடைய முதலமைச்சர் அவர்களும் ஏற்றுக் கொண்டிருக்கிறாரா இல்லையா என்று பார்த்தால் 28—10—83 அன்று சட்ட சபையிலேயே முதலமைச்சர் பேசி அந்தப் பேச்சு பத்திரிகைகளிலே வந்திருக்கிறது.

"சோமசுந்தரமோ காளிமுத்துவோ என்னை மீறிப் பேச மாட்டார்கள். அவர்கள் பேசுவதற்கு முன்பு என்ன கருத்துக்களை சொல்லப் போகிறோம் என்று சொல்லிவிட்டுத்தான் பேசுவார்கள். எங்களுக்குள் கருத்து ஒற்றுமை உண்டு. கருத்து ஒற்றுமை இல்லை என்றால் இந்த அமைச்சரவையைக் கலைத்து விட்டு வெளியே போவோம்."

இது முதலமைச்சர் அவர்கள் தம்பி காளிமுத்து அவர்களின் வாசகங்களுக்கு 28-10-83ல் தந்திருக்கின்ற ஒப்பந்த முத்திரை; அனுமதி முத்திரை என்று நான் அறிந்து கொண்டிருக்கிறேன்.

தமிழக முழுவதும் ''தமிழ் ஈழம்'' அமைய வேண்டுமென்ற ஒருமித்த கருத்தைக் கொண்டிருக்கிறது என்பதை பிரதமரிடத்தில் எடுத்துச் சொல்லவேண்டும் என்பதற்காகத்தான், கையெழுத்து இயக்கத்தை தி. மு. கழகத்தின் சார்பாக நாங்கள் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு — நாவலர் அவர்களுக்குத் தெரியும் — இந்திய வரலாறு தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் வெளியிட்டுள்ள ஆறும் வகுப்பு புத்தகத்தில் உள்ள ஒரு விஷயம் பற்றி நான் குறிப்பிட்டு, சட்டசபையிலேயே உடனே முதலமைச்சர் கல்வி அமைச்சரைக் கூப்பிட்டு இதைப் பற்றி விசாரியுங்கள் என்று கூறியும், நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

மாநிலம் புறக்கணிக்கப் படுகிறது என்று நாம் சொல்கிறோம். நாமே மாநிலத்தை புறக்கணிக்கிறோம். அந்த நூலிலே எதோடு வரலாறு நின்றுவிடுகிறதென்றால், பண்டித நேரு இந்தியாவின் பிரதமர் ஆகிறார். ராஜாஜி கவர்னர்—ஜெனரல் ஆகிறார் பிறகு சஞ்சீவ ரெட்டி குடியரசுத் தலைவர் ஆகிறார். அதற்குப் பிறகு சாஸ்திரி, இந்திராகாந்தி, மொரார்ஜி தேசாய், சரண்சிங் இவர்கள் பிரதமர்களாக பணியாற்றினார்கள் என்று முடிகிறது. ஒரு கால கட்டம் 1977 ஆம் ஆண்டு. காங்கரஸ் கட்சி இந்தியாவைத் தொடர்ந்து சுதந்திரத்திற்குப் பிறகு ஆண்டு வந்த கட்சி. அந்தக் கட்சியின் ஆட்சியைத் தோற்கடித்து ஒரு புதிய கட்சியின் ஆட்சி — ஜனதா கட்சியின் ஆட்சி தோன்றியது என்ற குறிப்பை அந்த வரலாற்றில் மறைப்பதற்கு என்ன காரணம்? அது மறைக்கப்படுகிறது. அது மாத்திரமல்ல;

தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் அண்ணு அவர்கள் இருபதாண்டு காலம் இங்கே ஆட்சிபுரிந்த காங்கிரஸ் ஆட்சியை மாற்றிவிட்டு முதலமைச்சராக வந்தாரே, அது ஏன் குறிப்பிப்படவில்லை. பெருந்தலைவர் காமராஜர் முதலமைச்சராக இருந்தாரே, அது ஏன் குறிப்பிடப்படவில்லை? பெரியவர் பக்தவத்சலம் முதலமைச்சராக இருந்தாரே அது ஏன் குறிப்பிடப்படவில்லை? அடியேன் இருந்தேன். அது குறிப்பிடப்பட வேண்டாம். என்னுடைய பெயரே இருக்கக்கூடாது என்று-நல்லபெயர் எடுக்க வேண்டுமென்ற கொள்கை கொண்ட இந்த அமைச்சரவையில்

அந்தப் பெயர் எடுக்கப்பட்டதற்காக நான்வருத்தப்படவில்லை. ஆனால் அதேபுத்தகத்தில் நம்முடைய முதலமைச்சருடைய படம் மாத்திரம் பெரிய அளவில் போடப்பட்டு இந்திரா காந்தியின் படம், சஞ்சீவ ரெட்டியார் படங்களும் போடப்பட்டு, அதிலே கீழே குறிப்பு என்று போட்டு. இந்தியப் பிரதமர், தமிழ்நாடு முதலமைச்சர், ஆகியோர் படங்களைச் சேகரித்து உங்கள் படத் தொகுப்பு புத்தகத்தில் ஒட்டி வைத்துக் கொள்ளுங்கள் என்று மாணவர்களுக்கு குறிப்பும் போடப் பட்டிருக்கிறது.

கடந்த முறை நான் பேசும்போது இதையெல்லாம் குறிப் பிட்டு அடுத்த பதிப்பிலாவது மாற்றுங்கள் என்று சொன்னேன். பெரிய குற்றச்சாட்டாகக் கூடச் சொல்லவில்லை. சரித்திரத்தில் உண்மைகளை மறைக்கக் கூடாது என்று சொன்னேன். இப்போது மறுபடியும் அந்தப் புத்தகம் வந்திருக்சிறது: அதிலே எந்த மாற் றமும் கிடையாது. சஞ்சீவ ரெட்டிக்குப் பதிலாக ஜெயில்சிங்கின் படம் போடப் பட்டிருக்கிறது. அவ்வளவு தான். முதலமைச்சர், அருமை நண்பர் எம். ஜி. ஆர். அவர்களுடைய படத்தை மாத் திரம் போட்டுவிட்டு, அண்ணுவின் படத்தை, காமராஜரின் படத்தை மற்றவர்கள்படத்தை அல்லது அவர்களது பெயரைக் கூட போடாமலிருப்பது மெத்தவும் வருத்தத்திற்கு உரியது.

தலைவர் அவர்களே, என்கையில் இருப்பது ''அகரமுதலி''. இந்த அகர முதலி என்கிறஒரு முயற்சியைத் தமிழக அரசு மேற் கொள்ள வேண்டுமென்று இந்த அவையில் நீங்கள் வேண்டு கோள் விடுத்தீர்கள் என்று நான் சொல்லமாட்டேன், ஆணையிட் டீர்கள். அன்றைக்கு அந்த ஆணையை நான் ஏற்றுக்கொண்டு ''செந்தமிழ் சொற்பிறப்பியல் பேரகர முதலியை'' தேவ நேயப் பாவாணர் அவர்களைக் கொண்டு தொடங்கப்படும் என்று இந்த அவையில் நான் அறிவித்தேன்.

அந்த நூல் இப்போது பத்தாண்டு காலத்திற்குப் பிறகு வெளி வந்திருக்கிறது. அதில் பதிப்புரை எழுதப்பட்டிருக்கிறது.

''தமிழக அரசின் தனி மகவாய்ப் பிறந்து கல்வித்துறை யாலூட்ட தமிழ்ப் பல்கலைக் கழகம் சீராட்ட சான்றோர் அர வணைக்க தமிழ்வளர்ச்சி—பண்பாட்டுத் துறையின் மடியில் தவழ்ந்து தளர் நடைபயிலும் இத்துறைப் பணிகள் வளர்ந்து பெருக வள்ளன்மை சுரந்து வண்டமிழ்க்கு வாழ்வளிக்கும் புரட் சித் தலைவர் பொன்மனச் செம்மல் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு என்றென்றும் நன்றிக் கடப்பாடுடையோம்.''

நான் இதை மறுக்கவில்லை. அவர்கள் பெயர் இருப்பதைப் பற்றி எந்தத் தவறும் இல்லை. ஆனால் அந்தப் பதிப்புரையில் முதல் பகுதியில் இது எப்படி எப்போது தொடங்கப்பட்டது என்பதைக் குறிப்பிடும்போது 'கடந்த ஈராயிரம் யாண்டு இலக்கிய வரலாற்றில் எவரும் தொடவியலாத சொற்பிறப்பு ஆராய்ச்சியில் வாகை சூடியவர் பாவாணர். அரை நூற்றாண்டுக் காலம் அயராது சொல்லாராய்ச்சி செய்து சொற்பிறப்புக் காண்பதில் ஒப்புயர்வற்ற செந்தமிழ் ஞாயிராய்ச் சுடரொளி வீசி தன்னிகரற்றுத் தண்டமிழ்ப் புலமை வாய்ந்த பெருமகனாரின் தனித்தன்மை வாய்ந்த கண்டுபிடிப்புகளுக்கு நூல் வடிவம் தரவும், அவருடைய ஆய்வுகளில் ஈடுபாடு கொண்ட தமிழ் மக்களின் வேணவாவை ஏற்கவும் தமிழக அரசு முன்வந்தது. உயர்தனிச் செம்பொழியாம் தமிழ் மொழியின் தனித் தன்மையும் தமிழர் பண்பாடும் துலக்கம் பெறவும், அவர் கொள்கையைப் பின்பற்றி உருவாகும் சொற்பிறப்பு அகரமுதலியில் பிற கொள்கைகளின் தலையீட்டைத் தவிர்க்கவும் பாவாணர்க்குத் தனித்த துறை ஏற்படுத்தித் தர அரசு விரும்பியது. அதன்படி 1974ஆம் ஆண்டு மே மாதம் 8ஆம் நாள் மொழிஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணரை இயக்குநராகக் கொண்ட செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்கம் தமிழக அரசின் கல்வித்துறையில் தனித்த துறையாகத் தோற்றுவிக்கப் பட்டது''.

நாவலர் அவர்களே, இதிலே என் பெயரும் இல்லை; அப்போது கல்வி அமைச்சராக இருந்த உங்கள் பெயரும் இல்லை. என்னதான் சொன்னாலும் இவ்வளவு குறுகிய எண்ணம்கொண்ட அரசாக இந்த அரசு இருக்கும் போது, எங்களது ஒத்துழைப்பை மாத்திரம் நீங்கள் எப்படி எதிர்பார்க்கிறீர்கள் என்பதை மாத்திரம் கேட்டு, என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

- * -

தலைமைக்கழக வெளியீடுகள்

*

அண்ணுவின் மாநில சுயாட்சி முழக்கம்	ரூ. 0.50
கலைஞர் தொடுத்த கணைகள்	5.00
உண்மைகளின் வெளிச்சத்தில்	1.00
தொடங்கினேம் தொடர்வோம்	1.00
மாநில சுயாட்சித் தீர்மானம்	2.00
இன உணர்வு	0.50
கொள்கையில் கோகினூர்	1.50
கலைஞர் வாழ்க	4.00
ஐ. நா. சபைக்கு தலைவர் கலைஞர் முறையீடு	0.50
எட்டப்பர்கள்! எச்சரிக்கை!!	1.00
தியாக வரலாறு	1.00
அண்ணு ஜோதி	0.50
முக்கனி	3.00
தமிழே மூச்சு	1.00
பஞ்சாப் பூகம்பம்	1.00
யாரால் யாரால்	1.00
ஆந்திராவும் இந்திராவும்	1.00
இந்திய ஜனநாயகம் எங்கே போகிறது	1.50
DMK on State Autonomy	2.00
The need of the Hour	1.00
Tamil Eelam-DMK Stand	1.50

Wrapper Printed at

Gem Press, Madras - 600 001.